பக்கங்கள்: பதினாறு

# உதயன்

Registered as a New...


விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 வைகாசி 13 புதன்கிழமை (27.05.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 182

# புலிகள் ஜனநாயக வழிக்குத் திரும்புவதை அரசு ஏற்காது!

## அந்த அமைப்பை நம்பமுடியாது என்கிறார் கோத்தபாய



கொழும்பு, மே 27

விடுதலைப் புலிக ர் அமைப்பு ஜனநாயக வழிக்குத் திரும்புவதை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளாது. அது ஜனநாயகப் பாதைக்குத் திரும்பினாலும் அதனை நம்பமுடியாது.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ.

விடுதலைப்புலிகள் பயங்கரவாதத்தைக் கைவிடுவார்கள் என்று நம்பமுடியாது என்றும் அவர் கூறியுள்ளார்.

பி.பி.ஸிக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்திருக்கிறார்.

இலங்கை அரச படைகளிடம் ஏற்பட்ட இராணுவத் தோல்வியின் பின்னர், ஜனநாயகப் பாதைக்குத் திரும்புவதற்கான தமது விருப்பத்தைத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் வெளிப்படுத்தியிருப்பதாகக் கூறப்படும் பின்னணியில், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் இது குறித்து மேலும் தெரிவித்திருப்பதாவது:-

புலிகள் பயங்கரவாதத்தைக் கைவிடுவார்கள் என நம்ப முடியாது. பல வருட வன்முறை நடவடிக்கை களுக்குப் பின்னர் விடுதலைப் புலிகளால் ஜனநாயக நடைமுறைக்கு வர முடியுமென நான் கருதவில்லை.

விடுதலைப் புலிகள் குறித்து நான் எவ்வித அக்கறையையும் கொள்ளவில்லை.

நாட்டில் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்குப் போதிய வேறு தமிழ் அரசியல் கட்சிகள் உள்ளன.

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் மறைத்து வைக்கப்பட்டுள்ள ஆயுதங்களை (16 ஆம் பக்கம் பார்க்க)

## உயர்தர, புலமைப் பரிசில் பரீட்சைகள் வன்னி மாவட்டங்களில் நடைபெறா

கொழும்பு, மே 27

வடமாகாணத்தில் உள்ள நான்கு மாவட்டங்களில் கல்விப் பொதுத் தராதர உயர்தர மற்றும் புலமைப் பரிசில் பரீட்சைகள் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 17,000 மாணவர்களுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைகளை நான்கு மாதங்களிற்கு பிற்போட பரீட்சைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைகள் எதிர்வரும் டிசெம்பர் மாதத் திற்கு (16 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுமக்கள் மீதான தாக்குதல்கள் குறித்து சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும்

### ஐ.நாவின் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை வலியுறுத்து



கொழும்பு, மே 27

''இலங்கையில் நடைபெற்ற இறுதி யுத்தத்தின்போது பொதுமக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக் குதல் தொடர்பாக சர்வதேச விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்.

''இரு தரப்புகளும் யுத்தத்தின் போது மக்களுக்கு தீங்கு விளைவிக்கக் கூடாது என்ற அடிப்படைக் கொள்கைகளை கடுமையாக மீறியுள்ளனர் என நம்புவதற்கு வலிமையான சான்றுகள் உள்ளன.

- இவ்வாறு ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைக் கவுன்ஸிலில் இலங்கை குறித்து நேற்று நடைபெற்ற கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் பேசியவை வருமாறு:-

சமீபத்தில் இலங்கையில்மீறப்பட்ட சர்வதேச மனிதாபிமானச் சட்டங்கள், மனித உரிமை மீறல்கள் குறித்து தீவிரமாக ஆராய்வதற்கும், இவை எவ்வாறு நடந்தன, எவ்வளவு மோசமாக இடம்பெற்றுள்ளன, (16 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் பலப்பரீட்சையில் இந்திய, பாக்., சீன, ரஷ்ய ஆதரவுடன் வலு நிலையில் இலங்கை!

நியூயோர்க், மே 27

ஐ.நா. மனித உரிமை கவுன்ஸிலில் முதல் முறையாக நேற்று இடம்பெற்ற இலங்கை குறித்த விசேட அமர்வை இந்தியா, சீனா, ரஷ்யா, பாகிஸ்தான் போன்ற நாடுகளின் வலுவான ஆதரவுடன் இலங்கை அரசு எதிர்கொண்டுள்ளது.

மேலும் இலங்கை தொடர்பான ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரேரணையை எதிர் கொள்ளும் விதத்தில் இலங்கை அரசு தனது பிரேரணையொன்றையும் அங்கு முன்வைத்துள்ளது.

இதேவேளை, ஜெனிவாவில் இடம் பெற்ற ஆரம்பக் கட்டக் கூட்டத்தில் இந்தியா, பாகிஸ்தான் உட்பட பல நாடுகள் இலங்கை அரசுக்கு ஆதரவு தரும் விதத்தில் மேற்படி இந்த அமர்வு கைவிடப்பட (16 ஆம் பக்கம் பார்க்க)

## பயங்கரவாதத் தடைச் சட்டமும் அவசரகாலச் சட்டமும் நீடிக்கும்

### இப்போதைக்கு வாபஸ் இல்லை என்கிறது அரசு

கொழும்பு, மே 27

நடைமுறையில் உள்ள அவசரகாலச்சட்டம் மற்றும் பயங்கரவாதத் தடைச்சட்டம் என்பன இப்போதைக்கு நடைமுறையில் இருந்து நீக்கப்படமாட்டா.

- இவ்வாறு அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற நிதிச் சட்டங்கள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

பயங்கரவாதம் தற்போது முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட போதிலும் அவசரகாலச் சட்டத்தையோ அல்லது பயங்கரவாதத் (16 ஆம் பக்கம் பார்க்க)

**நாளை**

**கல்விச்சுடர்**

தரம் - 05 புலமைப்பரிசில் மாணவருக்கான தயார்படுத்தல் பரீட்சைத் தொடர்

## புலிகள் தோற்கடிக்கப்பட்டமை முழு உலகுக்கும் கிடைத்த வெற்றி

### நாடாளுமன்றில் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன

கொழும்பு,மே 27

இலங்கையில் புலிகள் அமைப்பு தோற்கடிக்கப்பட்டமை இலங்கைக்கு மட்டுமன்றி சர்வதேச நாடுகளுக்கும் கிடைத்த வெற்றி என்று அமைச்சர் மைத்திரிபால சிறிசேன நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற நிதிச்சட்ட மூலங்கள் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:- (16 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் மீண்டும் எழுவதைத் தடுப்பதற்கு மேலும் 1 லட்சம் துருப்புக்கள் தேவை

### அதற்காக விரைவில் ஆள்சேர்ப்பு என்கிறார் இராணுவத் தளபதி



கொழும்பு, மே27

''விடுதலைப் புலிகளுக்கு மீண்டும் உயிர் கொடுக்கும் முயற்சிகள் வெளிநாடுகளில் இடம் பெறலாம். கொழும் பில் மறைந்துள்ள தற்கொலைப் போராளிகளைத் தேடிக் கண்டு பிடிக்கவேண்டிய அவசியம் உள் ளது. இந் நிலையில் புலிகள் மீண்டும் எழு வதைத் தடுப்பதற்கு மேலும் ஒரு இலட் சம் படையினர் தேவைப்படுகின்றனர்.''

- இவ்வாறு இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்தார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# யாழ். தேசியக் கல்வியியற் கல்லூரிக்கு தொடர்பாடல் கற்கை நெறிக்கு 48 பேர் தெரிவு

## நேர்முகத்தேர்வு நாளை இடம்பெறும்

யாழ்ப்பாணம், மே 27

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பக் கற்கை நெறிக்கான நேர்முகப்பரீட்சைக்கு 48 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

நேர்முகப் பரீட்சை நாளை வியாழக் கிழமை காலை 9 மணிக்கு யாழ். தேசிய கல்வி யியற் கல்லூரில் நடைபெறவுள்ளது என்று பீடாதிபதி எஸ்.யோகநாதன் அறிவித்துள்ளார்.

நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவானோர் விவரம் வருமாறு:-

ஜெயராஜசிங்கம் ஜெயசுதன் (சங்கானை), தாரணி தியாகராஜா (பருத்தித்துறை), கலையரசி விக்னராஜா (அளவெட்டி), நந்துஜா யேசுராஜா (மல்லாகம்), விக்னேஸ்வரி கிருஸ்ணபிள்ளை (யாழ்ப்பாணம்), சர்மிளா முத்துலிங்கம் (சாவகச்சேரி), சுந்தரலிங்கம் தினேஸ் (மிருசுவில்), தாரணி சுந்தரமூர்த்தி (நீர்வேலி), நிருபா பரமநாதன் (தொண்டைமானாறு), அபிநயா செல்வராஜா (யாழ்ப்பாணம்), சரணியா தர்மகுலசிங்கம் (வல்வெட்டித்துறை), தாட்சாயினி கிருஸ்ணசாமி (யாழ்ப்பாணம்), அரியரட்ணம் றேனலக்சுமி (வல்வெட்டித்துறை), சுகிர்தா சிவராஜா (யாழ்ப்பாணம்), சயமுதா யோகராஜா (யாழ்ப்பாணம்), ராஜதுரை நிருஜன் (மீசாலை), ஜீவிதா கணேசன் (கந்தர்மடம்), ராதை சுபாஸ்கரன் (சுன்னாகம்), செல்வராஜா தாரணி (மீசாலை), தனோஜா சிவராஜா (இளவாலை), கவிதா அரியரட்ணம் (பருத்தித்துறை), சுந்தரலிங்கம் பிரவீனா (யாழ்ப்பாணம்), கீர்த்தனா குலசிங்கம் (யாழ்ப்பாணம்), கஜேந்தினி பத்மநாதன் (யாழ்ப் பாணம்), கீர்த்தனா செயானந்தம் (சுன்னாகம்), பிரசாந்தினி ராஜரட்ணம் (ஏழாலை), லக்சனா சண்முகராஜா (கொக்குவில்) அன் சில் விக்ஸ் தயாளினி இமானுவேல் ஜோசேப் (பண்டத்தரிப்பு), வினோசியா தர்மகுலசிங்கம் (ஆனைக் கோட்டை)- (13 ஆம் பக்கம் பார்க்க)

### இணுவில் அருள்மிகு ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோவில்

**தீர்த்த உற்சவம்**

*விரோதி வைகாசி 14 ஆம் திகதி*
*நாளை (28.05.2009) வியாழக்கிழமை*
*காலை 9 மணியளவில் தீர்த்தம் நடைபெறும்.*
**நாதஸ்வர, தவில் கச்சேரி சிறப்பு அம்சமாக நடைபெறும்.**

தீர்த்த உபயகாரர்கள்.

### 31 ஆம் நாள் நினைவஞ்சலி



*மண்ணில்:*
*09.04.1934*



*விண்ணில்:*
*27.04.2009*

**திருமதி கந்தையா நாகம்மா**

*ஆயிரம் ஆயிரம் வார்த்தைகளால்*
*அன்னையே உம்மை நாம் அழைத்தாலும்*
*அகலாதம்மா எம்மைவிட்டு உந்தனது நினைவலைகள்*
*உந்தனது ஆத்மா சாந்திபெற இறைவனை*
*வேண்டுகின்றோம்.*

**அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வு இன்று (27.05.2009) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும்.**

நவாலி வடக்கு,
மானிப்பாய்.

குடும்பத்தினர்

### தவறிவிட்டது

கல்வியங்காட்டுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் 536614 இலக்கமுடைய காசோலை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொ.பே. 0777242230 இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

ச.நாகேந்திரன்.

### தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையுள்ளது)

## கிளைக்குழு தெரிவுக்கான அறிவித்தல்

மேற்படி சங்கத்தின் கிளைக்குழுக்களின் தெரிவு 04.05.2009 ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு அமைவாக 10.05.2009இல் நடத்தப்பட்டது. இருந்தும் கீழே குறிப்பிடப்படுகின்ற கிளைகளினது பொதுச் சபை அங்கத்தவர்கள் போதிய அளவில் வருகை தராமையால் (நிறைவெண் இன்மையால்) அக்கிளைகளின் கிளைக்குழுத் தெரிவு நடைபெறவில்லை. இக்கிளைகளினது கிளைக்குழுத் தெரிவிற்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் வழங்கும் முகமாக கீழ்குறிப்பிடப்பட்ட இடங்களில் 31.05.2009 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மு.ப 10 மணிக்கு குறிப்பிட்ட நிகழ்ச்சி நிரலுக்கமைய கிளைப்பொதுச் சபைக் கூட்டம் நடைபெறும்.

இந்த அறிவித்தல் தொடர்பாக ஒவ்வொரு கிளையின் பொதுச்சபைக்கு வந்து வாக்களிக்கத் தகுதியுள்ள ஒவ்வொரு அங்கத்தவர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. இருப்பினும் அனேகமான அங்கத்தவர்கள் இடம்பெயர்வு காரணமாக வேறு இடங்களில் வசிப்பதால் இந்த அறிவித்தலை தமக்கு வழங்கப்பட்ட தனித்தனி அறிவித்தலாக ஏற்றுக்கொண்டு சம்பந்தப்பட்ட தங்களது கிளைக்குரிய கூட்டம் நடைபெறும் இடத்திற்கு குறிப்பிட்ட நேரத்திற்கு வந்து கிளைப்பொதுச்சபைக் கூட்டத்திற்கு சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

| 31.05.2009 ஆம் திகதி ஞாயிற்றுக்கிமை மு.ப 10 மணி | கிளைப்பொதுச்சபைக் கூட்டத்தின் தவிசாளர் பெயர் | கிளைப்பொதுச்சபைக் கூட்டம் நடத்தப்படும் இடங்கள் |
|---|---|---|
| கிளை 04 விராங்கொடை | பா.கலைச்செல்வி | துர்க்காபுரத்தில் அமைந்துள்ள லயன்ஸ் கழக மண்டபம் |
| கிளை 38 மாங்கொல்லை | க.திசாகரன் | துர்க்காபுரத்தில் அமைந்துள்ள லயன்ஸ் கழக மண்டபம் |
| கிளை 40 குரும்பசிட்டி கிழக்கு | இ.பாலச்சந்திரன் | துர்க்காபுரத்தில் அமைந்துள்ள லயன்ஸ் கழக மண்டபம் |
| கிளை 15 வறுத்தலைவிளான் | க.கமலநாதன் | வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம், உரும்பிராய் |
| கிளை 19 ஒட்டகப்புலம் | ஐ.நாகேஸ்வரன் | யாழ்ப்பாணம் கிளைக் கட்டடம், யாழ்ப்பாணம் |
| கிளை 25 மயிலிட்டி கிழக்கு | T.N.ராஜா | மயிலணி கிளைக் கட்டடம், சுன்னாகம் |
| கிளை 34 ஆஸ்பத்திரியடி, தெல்லிப்பழை | அ.விமல்ராஜா | கிளை 34ன் கட்டடம், கட்டுவன்புலம் |
| கிளை 32 பலாலிச்சந்தி | சு.கணேசு | பலாலி கடற்தொழிலாளர் கூட்.சங்.மண்டபம், பொலிகண்டி. |

**பொ.சிவலிங்கம்**
**கூ.அபி.உதவி ஆணையாளர்,**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### திருமதி வில்பிரட் மேரி லூட்ஸ் (யஸ்மின்)



சுண்டுக்குளி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த யஸ்மின் (18.05.2009) திங்கட் கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (26.05.2009) செவ்வாய்க்கிழமை பி.ப. 2.30 மணிக்கு பொறளை கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சுண்டுக்குளி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்: வில்பிரட் (நிமல்) கணவன்,
பத்திநாதர் (தந்தை).

### கார்த்திகேசு முத்தையா (காரைநகர்)

காரைநகர், குண்டங்கரையைப் பிறப்பிடமாகவும் விளானையை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு முத்தையா நேற்று (26.05.2009) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - வள்ளியம்மை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - சின்னம்மா தம்பதியினரின் மருமகனும் தெய்வானைப்பிள்ளையின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கந்தையாவின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.05.2009) புதன்கிழமை அவரது இல்லத்தில் மு.ப. 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தில்லை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*விளானை,*
*காரைநகர்.*

தகவல்:
தெய்வானைப்பிள்ளை
(மனைவி).

### விசுவலிங்கம் இராசநாயகம்பிள்ளை



மந்துவில் மேற்கு, மந்துவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விசுவலிங்கம் இராசநாயகம்பிள்ளை நேற்று (26.05.2009) செவ்வாய்கிழமை காலை சிவபதமடைந்தார்.

அன்னார் சிவகாமிப்பிள்ளையின் அன்புக் கணவரும் அருந்தவமூர்த்தி (சுவிஸ்), செல்வராணி, சிவாணந்தமூர்த்தி (ஆசிரியர், கரம்பைக்குறிச்சி அ.த.க.பாடசாலை) ஆகியோரின் அன்புத்தந்தையும் சிவகாமசுந்தரி, தில்லைநாயகம், செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் செல்வலட்சமி (சுவிஸ்), சந்திரசேகரம்பிள்ளை (முகாமைத்துவ உதவியாளர், வலயக் கல்வி அலுவலகம், சாவகச்சேரி) ஆகியோரின் அன்பு மாமனாரும் சௌமியன், பிரியங்கன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று செவ்வாய்க் கிழமை மாலை மந்துவிலில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கேலத்து அம்மன் கோயிலடி,*
*மந்துவில் மேற்கு,*
*கொடிகாமம்.*

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி தவமணிதேவி மகேந்திரன்

(நூலகர், யாழ்.மாநகரசபை, நல்லூர்,
முன்னாள் நூலகர், நல்லூர் பிரதேசசபை நூலகம், கொக்குவில்)



யாழ்ப்பாணம் திருநெல்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் 16/25, சிவன் கோயில் றோட், திருநெல்வேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட தவமணிதேவி மகேந்திரன் 24.05.2009 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளைப்பாறிய அதிபர் சி.சதாசிவம்பிள்ளை - இளைப்பாறிய ஆசிரியை உருக்குமணி தம்பதியினரின் மகளும் சரசாலையைச் சேர்ந்த காலஞ்சென்ற செல்லையா மற்றும் அமிர்தமணி தம்பதியினரின் மருமகளும் செல்லையா மகேந்திரனின் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், யாழ். பல்கலைக்கழகம்) அன்பு மனைவியும் பிரியங்கன் (பேராதனைப் பல்கலைக் கழகம்), துஷியங்கன் (மாணவன், யாழ்.இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற லோகேஸ்வரி விஜயரெத்தினம், லோகேஸ்வரன் (B.Sc. (Hons) - அவுஸ்திரேலியா), கெகதீஸ்வரன் (கொழும்பு), சிவநாதன் (முன்னாள் பணியாளர், யாழ். ப.நோ.கூ.சங்கம்), கேதீஸ்வரன் (முன்னாள் பணியாளர், ஐ.வி. சங்கம்), குகநாதன், சிவராணி (ஜேர்மனி), சிவகலை (ஜேர்மனி), கலைச்செல்வி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.05.2009) புதன்கிழமை பி.ப. 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

16/25, சிவன்கோயில் றோட்,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
செல்லையா மகேந்திரன் (கணவர்)
(யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடம்).
தொ.பே. 060 221 4477

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## இரு பிரதான இனங்களுக்கும் இடையில் இங்கு நல்லிணக்கம் சாத்தியமானதா?

இலங்கையில் சமாதானச் செயற்பாடுகளுக்கான சுவிட்ஸர்லாந்து அரசின் விசேட பிரதிநிதியாக ஐந்து ஆண்டுகளாக - கடந்த வருடம் வரை - பணியாற்றிய அந்நாட்டு நிபுணர் மார்ட்டின் ஸ்ட்ரூஸிங்கர் முக்கியமான உண்மை ஒன்றை வெளிப்படையாக எடுத்துரைத்திருக்கின்றார்.

*''விடுதலைப் புலிகளை இலங்கைப் படைகள் முற்றாக அழித்தொழித்திருப்பதாகப் பிரகடனப்படுத்தியுள்ள இச்சமயத்தில் இலங்கைத் தீவில் பெரும்பான்மையினரான சிங்களவர்களுக்கும் சிறுபான்மையினரான தமிழர்களுக்கும் இடையிலான உறவு நிலை வேறுபாடு மிக மோசமாக - மிக விசாலமாக - விரிவடைந்திருக்கின்றது.*

*''கிளர்ச்சி அமைப்பான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை இலங்கை அரசுப் படைகள் வெற்றி கொண்டிருக்கின்றமையோ அல்லது புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரனின் மரணமோ இந்த இரண்டு இனங்கள் இடையேயும் நல்லிணக்கம் மீண்டும் ஏற்படுவதற்கான வாசலைத் திறந்து விடப் போவதில்லை.''*

- இப்படி அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு இராணுவ வழிமுறை மூலம் தீர்வு காணவே முடியாது என இப்பத்தியில் நாம் திரும்பத் திரும்ப வலியுறுத்தி வந்த யதார்த்தத்தை, மீண்டும் ஒரு தடவை வேறு வார்த்தைகளில் சுவிஸ் நிபுணர் சுட்டிக்காட்டியிருக்கின்றார். அவ்வளவே.

இராணுவ வெற்றிகள் அடக்குமுறையின் தொடர்ச்சியான சாதனைகளாக நிலைநிறுத்தப்படலாம். ஆனால் அந்த அடக்குமுறையின் விளைவாக எழுந்த உரிமைக்கான - நியாயம் தேடலுக்கான - கிளர்ச்சிக்கு அது விடையாகி விட முடியாது என்பதுதான் உண்மை.

நடந்து முடிந்த யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் அப்பாவி மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட மனித நேயமற்ற வன்முறைகள் என்பன இரு இனங்களும் இணைந்து வாழ்வதற்கான எதிர்கால வாய்ப்பை சின்னாபின்னமாக்கிச் சிதறடித்து விட்டன என்ற கருத்து நிலைப்பாட்டில் சுவிஸ் நிபுணர் மார்ட்டின் சுட்டிக்காட்டும் அம்சங்களில் அர்த்தங்களும், நியாயமும் நிறையவே உள்ளன.

இறுதி யுத்தத்தின் தீவிரம் பொதுமக்கள் மீது பேரழிவைத் தந்து நிற்கின்றது. அதன் தாக்கமும் மூர்க்கமும் அது ஏற்படுத்திய மனிதக் கொடூரங்களும், நாசங்களும் இப்போதைக்கு மூடி மறைக்கப்பட்டிருக்கலாம். இந்த விவகாரத்தில் சர்வதேசத்தின் கண்களைத் தற்காலிகத் திரைகள், தடைகள் மூலம் மறைத்து விட்டாலும் அது தமிழர் தேசியத்தின் ஆன்மாவில் பேரடியாக, பேரிடியாக வீழ்ந்துவிட்டிருப்பது பொய்யல்ல. அதன் வலியும், நோவும் தலைமுறைகள் கடந்தாலும் - சந்ததிகள் சென்றாலும் - தமிழினத்தின் நெஞ்சில் ஆறிவிடவோ, நீங்கிவிடவோ போவதில்லை.

பல்லாயிரக் கணக்கில் மக்கள் இடம்பெயர்ந்து, பேரவலத்துடன் குறுகிய சிறிய பரப்பில் இடறுப்பட்டுக் கூடியிருக்கையில், அக்கூட்டம் மீது கண்மூடித்தனமாகத் தொடுக்கப்பட்ட யுத்தத்தின் பின்னால் அதை நடத்தியோரின் மனதில் புதைந்து - ஆழ வேரூன்றி - கிடந்த குரூரமும் இனவெறி வன்மமும் எத்தகையது என்பதைத் தமிழினம் நன்கு புரிந்து கொண்டுள்ளது.

அத்தகைய கொடூரத்தின் மீது கட்டியெழுப்பப்பட்டு, வெற்றி கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் 'பயங்கரவாதத்தின் வீழ்ச்சி' தொடர்பாக தென்னிலங்கை நடத்திய ஆனந்தக் கொண்டாட்டமும் எடுப்பும் கூடத் தமிழர்கள் மனதில் பல்லாண்டுகள் ஆகியும் ஆறிவிட முடியாத நிரந்தர ரணத்தை ஏற்படுத்தியிருக்கின்றன என்பதும் நிதர்சனமாகும்.

இத்தகைய பின்புலத்தில் இலங்கைத் தீவின் இரு பிரதான இனங்களுக்கும் இடையில் நல்லிணக்கமும், புரிந்துணர்வும், பரஸ்பர நட்புணர்வும் விரைந்து ஏற்படும் என்று இலகுவில் கருதிவிட முடியாது.

அத்தகைய இணக்கத்துக்கு சாத்தியமான சகல அடிப்படைகளையும் - யதார்த்தப் புறச்சூழ்நிலைகளையும் - அடியோடு சிதைத்து நிற்கின்றது தற்போதைய இராணுவ வெற்றிகள் மீது கட்டப்பட்டு கம்பீரமாக எழுந்து நிற்கும் மேலாதிக்க - மேலாண்மை - சிந்தனைப் போக்காகும்.

இலங்கைத் தீவில் சமவுரிமைகளோடும், கௌரவத்தோடும், சுயாட்சிக் கட்டமைப்பின் கீழும் வாழக்கூடிய சமரச வாய்ப்பு சிறுபான்மையினரான தமிழருக்கு வழங்கப்படும் என்ற உறுதியை சொல்லிலும் செயலிலும் தென்னிலங்கை ஆட்சிப் பீடமும்,மக்களும் வெளிப்படுத்திக் காட்டவேண்டும்.

அப்படிக் காட்டினால் மட்டுமே இந்த மண்ணில் பெரும்பான்மை இனத்தவருடன் நல்லிணக்கத்துடனும், சமரசமாகவும் வாழ முடியும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு ஏற்படும்.

அதை விடுத்து இராணுவ மேலாதிக்கத்தையும், ஆட்சிப் பீட மேலாண்மையையும் நிலைநிறுத்தும் மிதப்புப் போக்கில் நடந்து கொள்வது அவநம்பிக்கையையும், வெறுப்புணர்வையும், பகையுறவையும் மட்டுமே மேலும் மேலும் வளர்க்கும்.

இந்த நிதர்சனத்தை தென்னிலங்கை மக்களும், ஆட்சிப்பீடமும் உள்வாங்கி உணர்ந்து கொள்ளாத வரையில் இத்தீவில் நல்லிணக்க சமரசம் என்பது வெறும் கானல் நீர் மட்டுமே.

# மனிதாபிமான அடிப்படையில் இலங்கைத் தமிழர்களுக்கு அகதி அந்தஸ்து வழங்குவதற்கு அவுஸ்திரேலியா முடிவு

சிட்னி, மே 27

மனிதாபிமான அடிப்படையில் இலங்கைத் தமிழர்களுக்கு அகதி அந்தஸ்து வழங்க தயார் என அவுஸ்திரேலிய அரசாங்கம் அறிவித்துள்ளது.

சட்ட ரீதியான தேவைகளைப் பூர்த்தி செய்யும் சகல இலங்கைத் தமிழர்களுக்கும் அடைக்கலம் வழங்கப்படும் என அவுஸ்திரேலியா அறிவித்துள்ளது.

சுகாதாரம், ஒழுக்கம் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆகிய முக்கிய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நபர்களுக்கு அரசியல் தஞ்சம் வழங்கப்படவுள்ளது.

எவ்வாறெனினும், இலங்கையின் வடபகுதியில் அகதி முகாம்களில் தங்கி அல்லலுறும் அப்பாவி பொது மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய அவுஸ்திரேலிய அரசாங்கம் உதவிகளை வழங்க உள்ளதாக தேசிய தொடர்பாடல் அதிகாரி சான்டி லாகூன் தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக மிகவும் ஆபத்தான வழிகளில் அவுஸ்திரேலியாவில் தஞ்சமடைய இலங்கைத் தமிழர்கள் முயற்சி மேற்கொண்டு வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனை தடுக்கும் முகமாக சட்ட ரீதியான வகையில் மனிதாபிமான அரசியல் தஞ்சம் வழங்க தமது அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக லாகூன் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறெனினும், இலங்கைத் தமிழர்களுக்கு அகதி அந்தஸ்து வழங்க வேண்டாம் என அந்நாட்டுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் சானக வல்கம்பொல தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர்களுக்கு அரசியல் தஞ்சம் வழங்கப்பட வேண்டிய எவ்வித அவசியமும் நாட்டில் ஏற்படவில்லை எனவும், அரசியல் தஞ்சம் வழங்கப்படக் கூடாது எனவும் அவர் அவுஸ்திரேலிய அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார். (50)

## இலங்கை அரசாங்கத்தின் மீது உடனடி விசாரணை அவசியம்

### இஸ்ரேல் கோரிக்கை

டெல்அவிவ், மே 27

இலங்கை அரசாங்கத்தின் படை நடவடிக்கை தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையும் உலக சுகாதார நிறுவனமும் விசாரணைகளை நடத்தவேண்டும் என இஸ்ரேல் கோரிக்கை விடுத்திருக்கின்றது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

இலங்கை அரசாங்கத்தின் படை நடவடிக்கை தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையும் உலக சுகாதார நிறுவனமும் விசாரணைகளை நடத்தவேண்டும். அதற்கான குழுவினரை அவர்கள் அனுப்ப வேண்டும்.

உலக சுகாதார நிறுவனத்தின் தலைமைப் பொறுப்பை இலங்கைக்கு வழங்குவதை எதிர்த்துள்ள இஸ்ரேல், இலங்கை மீது அனைத்துலக விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலின் இந்த அறிவிப்பு இலங்கை அரசாங்கத்தை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

இதுதொடர்பாகஇஸ்ரேலுடன்கலந்துரையாடப்போவதாக இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

இலங்கை அரசின் கண்மூடித்தனமான படை நடவடிக்கை, மனித உரிமை மீறல்கள் மற்றும் வன்முறைகள் தொடர்பாக விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் எனவும் இஸ்ரேல் கோரிக்கை விடுத்திருக்கின்றது.

# ஐ.நா. பொதுச் செயலரின் பயணத்தின் பின்னரும் அகதிமுகாம்களில் உதவிப் பணிகளுக்கு அனுமதி மறுப்பு

## 'கிறிஸ்ரியன் ருடே' ஊடகம் தெரிவிப்பு

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் நாயகம் பான் கீ மூனின் பயணத்தின் பின்னரும் இடம்பெயர்ந்த மக்களுக்கான உதவிப்பணிகளுக்கான அனுமதியை இலங்கை அரசாங்கம் வழங்கவில்லை என 'கிறிஸ்ரியன் ருடே' ஊடகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஐ.நா. பொதுச் செயலாளர் நாயகம் பான் கீ- மூனின் பயணத்தின் பின்னரும் இடம்பெயர்ந்த மக்களுக்கான உதவிப் பணிகளுக்கான அனுமதியை இலங்கை அரசாங்கம் வழங்கவில்லை.

உதவிப்பணிகள் இடம்பெயர்ந்த முகாம்களை சென்றடைவதற்கான அனுமதிகளை இலங்கை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என கடந்த ஞாயிற்றுக்கிழமை பான் கீ -மூன் இலங்கை அரச தலைவரிடம் கேட்டிருந்தார்.

ஆனால், பாதுகாப்பு நடைமுறைகள் நிறைவுபெற்ற பின்னரே அனுமதிகள் வழங்கப்படும் என ஜனாதிபதி மஹிந்த தெரிவித்திருந்தார்.

மனிக் பாம் முகாமில் 2 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் தங்கியுள்ளனர். அரசின் தடைகள் நீக்கப்படாது விட்டால் மக்கள் தங்கியுள்ள முகாம்கள் மிகவும் மோசமான நிலையை அடையலாம் என பெரிய உதவி நிறுவன அமைப்பான 'வேள்ட் விஷன்' தெரி வித்துள்ளது.

முகாம்களுக்கு செல்ல அனுமதிகளை வழங்குமாறு உதவி நிறு வனங்கள் கூட்டாக அறிக்கை விடுத் துள்ளன.

ஆயிரம் ஏக்கர் பரப்பளவுள்ள முகாம் மிகவும் பெரியது. அதன் ஒரு முனையில் இருந்து மறுமுனைக்கு நடந்து செல்வதற்கு ஒரு மணிநேரம் எடுக்கும்.

எனவே வாகனங்கள் இன்றி அங்கு பணியாற்றுவது மிகவும் கடினமானது. அது மக்களின் உயிர்களை ஆபத்திற்கே இட்டுச்செல்லும் என 12 அமைப்புக்கள் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளன.

மனிதாபிமான அமைப்புக்களுடன் ஏற்படுத்தப்பட்ட உடன்பாடுகளின் நடைமுறை விதிகளை இலங்கை அரசு மதித்து நடக்கவேண்டும், எ[illegible] பணிகளை நாம் மேற்கொள்ள அனு மதிக்க வேண்டும் எனவும் அவை கேட்டுள்ளன என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ்., வவுனியா உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்பு மனுத் தாக்கல் ஜூன் 17 முதல் 24 வரை

கொழும்பு, மே 27

யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்டங்களில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

இவற்றுக்கான நியமனப் பத்திரங்கள் ஜூன் மாதம் 17 ஆம் திகதி தொடக்கம் 24 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் எனவும் உள்ளூராட்சி, மாகாண சபைகள் விவகார அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் அறிவித்திருக்கின்றார்.

இந்த இரண்டு மாவட்டங்களுக்குமான உள்ளூராட்சி சபை தேர்தல்களை நடத்துவதன் மூலம் வடபகுதியில் வழமை நிலைமையைக் கொண்டுவரும் முயற்சியில் அரசாங்கம் சரியான பாதையில் செல்கின்றது என்ற செய்தி அனைத்துலக சமூகத்துக்குத் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் நேற்று முன்தினம் திங்கட்கிழமை வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருக் கின்றார்.

வடபகுதியில் முடிந்தளவுக்கு விரைவாக வழமை நிலையை ஏற்படுத்துத்த வேண்டும் என்பதில் அரசாங்கம் தீவிரமான அக்கறையாக இருப்பதாகத் தெரிவித்திருக்கும் அமைச்சர் தென்னக்கோன், அதற்கு வசதியாகவே உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் தொடர்பாக இப்போது அறிவிக்கப்பட்டிருப்பதாகவும், இதனைத் தொடர்ந்து வடமாகாண சபைக்கான தேர்தல்கள் நடத்தப்படும் எனவும் தெரிவித்திருக்கின்றார்.

## தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம், மே 27

இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் ஆலய தேர்த்திருவிழா இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

காலை 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று முற்பகல் 10 மணிக்கு சுவாமி தேருக்கு எழுந்தருளுவார்.

நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழா இடம் பெறும்.

இந்த ஆலயப் பெருந்திருவிழா கடந்த 17 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

(சிறப்பு மலர் 7 ஆம் பக்கத்தில்)

## நாளை

| | |
|---|---|
| வைகாசி 14 | 28.05.2009 |
| | வியாழக்கிழமை |
| திதி: | சதுர்த்தி |
| | மு.ப. 09.27 வரை |
| நட்சத்திரம்: | புனர்பூசம் |
| | பி.ப. 01.27 வரை |
| சுபநேரம்: | 07.22 - 08.52 |
| ராகுகாலம்: | 01.22 - 02.52 |

## வலி.கிழக்கில் முன்பள்ளி ஆசிரியர்கள் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், மே 27

வலி.கிழக்கு பிரதேச சபையின் கீழ் இயங்கும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு தை, மாசி, பங்குனி ஆகிய மாதங்களுக்குக்கான கொடுப்பனவு நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு சபை அலுவலகத்தில் வைத்து வழங்கப் படும் என்று பிரதேச சபைச் செயலாளர் அறிவித்துள்ளார். (1)

## ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளில் தேர்ச்சிபெற்ற அரச ஊழியர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு

அச்சுவேலி, மே 27

ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளில் தேர்ச்சிபெற்ற அரசாங்க ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் 1998 ஆம் ஆண்டிலிருந்து நிலுவையுடன் வழங்கப்படுகின்றது.

பொதுநிர்வாக அமைச்சின் 29/98 சுற்றறிக்கையின் பிரகாரம் விண்ணப்பித்த அரசாங்க ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு 150 ரூபா மாதாந்தக் கொடுப்பனவும்; வருடாந்த சம்பள ஏற்றத்திற்கு சமமான ஓய்வூதியமற்ற மாதாந்தக் கொடுப்பனவும்; ஒருமுறை மாத்திரம் செலுத்தத் கூடிய 5 ஆயிரம் ரூபர் சன்மானத் தொகையும் ஊக்குவிப்புக் கொடுப்பனவாக வழங்கப்படுகின்றது.

பொதுநிர்வாக அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைய சம்பந்தப்பட்ட அரச ஊழியர்கள், ஆசிரியர்கள் சமர்ப்பித்த ஆவணங்களுடன் கூடிய விண்ணப்பங்கள் அமைச்சினால் பரிசீலனை செய்யப்பட்டு தகுதியானவர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் திணைக்களத் தலைவர்கள் ஊடாக மாதாந்த சம்பளத்துடன் வழங்கப்படுகின்றது.

1998 ஆம் ஆண்டுக்கு முன்னர் உரிய மொழித் தகைமையுடன் நியமனம் பெற்ற அரசாங்க ஊழியர்களுக்கு 1998 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து கொடுப்பனவுகள் வழங்கப்படுகிறது.

ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்குவது தொடர்பான அறிவுறுத்தல்கள் மத்திய அமைச்சுக்களால் வழிப்படுத்தல்களின் பிரகாரம் மாகாண அமைச்சுச் செயலாளர்களினால் திணைக்களங்களின் பணிப்பாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. (203-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையில் காங்., தி.மு.க. கண்துடைப்பு நாடகம்

## பா.ஜ.கவின் தமிழகத் தலைவர் குற்றச்சாட்டு



சேலம், மே 27

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் காங்கிரஸும், தி.மு.கவும் சேர்ந்து கண்துடைப்பு நாடகம் நடத்துகின்றன - என்று பா.ஜ.கவின் தமிழகத் தலைவர் இல. கணேசன் தெரிவித்தார்.

மேலும், பெரும்பான்மை மக்களின் கருத்தைப் பிரதிபலிப்பதாக நடந்து முடிந்த தேர்தல் முடிவுகள் அமையவில்லை என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

சேலத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற கட்சி ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்றபோதே செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் அங்கு கூறியவை வருமாறு -

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் காங்கிரஸும், தி.மு.கவும் சேர்ந்து கண்துடைப்பு நாடகம் நடத்துகின்றன.

அமைச்சரவையில் பங்கேற்பது குறித்து செயற்குழுவைக் கூட்டி முடிவு செய்யப்படும் என்று கருணாநிதி முதலில் கூறினார். ஆனால் திடீரென்று இப்போது குடும்பத்தினரிடையே மட்டும் பேசி முடிவு எடுத்துள்ளார்.

குடும்ப அரசியல் காரணமாக தி.மு.க பல மிழர் ... ளது. இதன் காரணமாக தமிழக ... தேர்தல் 2010ஆம் ஆண்டே ...ப்புகள் உள்ளன.

...த்தில் தேர்தல் தோல்வி குறித்து பா.ஜ... மாவட்ட வாரியாக ஆலோசனை நடத்தி வருகிறது. கடந்த பேரவைத் தேர்தலில் 2.06 சதவீத வாக்குகள் பெற்ற பா.ஜ.க., மக்களவைத் தேர்தலில் 6.68 சதவீத வாக்குகள் பெற்றுள்ளது.

நடந்து முடிந்த மக்களவைத் தேர்தலின் முடிவுகள் பொதுமக்களின் கருத்தாக அமையவில்லை - என்றார்.




# அழகிரி, தயாநிதி, ராசா உட்பட 7 எம்.பிக்களுக்கு அமைச்சர் பதவி





சென்னை, மே 27

மத்திய அமைச்சுப பதவிகளில் மு.க.அழகிரி, ஆ.ராசா, தயாநிதி மாறன் ஆகியோரும், இணை அமைச்சுப் பதவிகளில் பழனி மாணிக்கம், ஜெகத்ரட்சகன், நடிகர் நெப்போலியன், காந்திசெல்வன் ஆகியோரும் இடம் பெறுவர் என தி.மு.க. முடிவு செய்துள்ளது.

மத்திய அமைச்சரவையில் சேருவது பற்றி உயர்நிலை செயற்றிட்டக் குழு முடிவு செய்யும் என்று முதல்வர் கருணாநிதி அறிவித்திருந்தார். அதன்படி கடந்த 2 நாள்களாக இந்தக் குழு கூடி விவாதித்தது. அதைத் தொடர்ந்து பிரதமர் மன்மோகன் சிங் விடுத்த வேண்டுகோளை ஏற்று மத்திய அமைச்சரவையில் சேர முடிவு செய்யப்பட்டு உள்ளது.

அமைச்சரவையில் தி.மு.க.வுக்கு 3 அமைச்சு பதவியும், 4 இணை அமைச்சுப் பதவியும் வழங்கப்பட உள்ளன.

அமைச்சுப்பதவிகள் மு.க.அழகிரி (இரசாயனம் மற்றும் உரங்கள் துறை), ராஜா (தகவல் தொழில்நுட்பம், தயாநிதி மாறன் (ஜவுளித்துறை) ஆகியோருக்கு அளிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதுபோல் இணை அமைச்சுப் பதவி பழனி மாணிக்கம் (நிதித்துறை), நெப்போலியன் (தகவல் ஒலிபரப்பு), ஜெகத்ரட்சகன் (உள்துறை அல்லது ரயில்வே துறை), காந்தி செல்வன் (ஊரக மேம்பாட்டுத் துறை) ஆகியோருக்கு வழங்கப்படும் என்று தெரிகிறது.

இந்தப் பட்டியல் மத்திய அமைச்சர் குலாம் நபி ஆசாத்திடம் வழங்கப்பட்டது. அவர் அதை பிரதமர் மன்மோகன் சிங்கிடம் கொடுத்தார். அதைத் தொடர்ந்து முதல்வர் கருணாநிதியிடம் பிரதமர் மன்மோகன் சிங் பேசினார்.

இந்த நிலையில் தி.மு.க. கொடுத்துள்ள பட்டியலில் இடம் பெற்றிருக்கும் 7 பேரும் நேற்றுமுன்தினம் டில்லிக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

# பதவியேற்பு விழா தள்ளிவைப்பு; கடும் அதிருப்தியில் தி.மு.கவினர்

புதுடில்லி, மே 27

நேற்று நடைபெறவிருந்த மத்திய அமைச்சரவைப் பதவியேற்பு விழா திடீரெனத் தள்ளிவைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

கருணாநிதியின் மூத்த மகன் மு.க.அழகிரி உட்பட தி.மு.க. அமைச்சர்கள் நேற்று மாலை பதவியேற்க இருந்த நிலையில் அந்த விழா திடீரென தள்ளிவைக்கப்பட்டுளளது. அமைச்சர் பொறுப்பை ஏற்க முடியாமல் இரண்டாவது முறையாக ஏற்பட்டுள்ள தடங்கல் தி.மு.கவினருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது எனக் கூறப்படுகிறது.

கடந்த 23ஆம் திகதி பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் 20 பேர் கொண்ட அமைச்சரவை பதவியேற்றது. தாங்கள் கோரியபடி அமைச்சுப் பதவிகளைத் தராததையால் முதல்வர் தலைமையில் தி.மு.கவினர் கோபித்துக் கொண்டு சென்னை திரும்பினர். வெளியிலிருந்து ஆதரவு வழங்கப் போகிறோம் என அறிவித்தனர். இதனால் தி.மு.கவினர் முதல் நாளிலேயே பதவி ஏற்க முடியாமல் போனது.

காங்கிரஸ் தனது நிலைப்பாட்டில் உறுதியாக இருந்ததால், தி.மு.க. அமைச்சர்கள் பிரச்சினையில் ஒரு தேக்க நிலை இருந்தது.

பிரதமரின் ஆலோசகர் எம்.கே. நாராயணன், முதல்வர் கருணாநிதியை சந்தித்து பேசிய பின்னர், இப்பிரச்சினைக்கு தீர்வு ஏற்பட்டது.

காங்கிரஸ் அளிக்க முன்வந்த 3 அமைச்சுகள், 4 இணையமைச்சுப் பதவிகளை ஏற்றுக் கொண்டு உள்ளிருந்து ஆதரவு தெரிவிக்க தி.மு.க. சம்மதித்ததை தொடர்ந்து தேக்க நிலை நீங்கியது.

தி.மு.க. அமைச்சர்கள் பட்டியலை பிரதமருக்கு முதல்வர் கருணாநிதி அனுப்பி வைத்துள்ளார். அதனை பிரதமரும் ஏற்றுக் கொண்டிருக்கிறார். இதனை தொடர்ந்து பதவியேற்பதற்காக முதல்வரின் மூத்த மகன் அழகிரி நேற்றுமுன்தினம் தனது குடும்பத்தினர் மற்றும் ஆதரவாளர்களுடன் விமானம் மூலம் புதுடில்லிக்கு புறப்பட்டுச் சென்றார்.

நேற்று மாலையில் பதவியேற்பு விழா நடைபெறும் என்று கூறப்பட்டது. இதற்கான ஏற்பாடுகள் ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்று வந்தன. தயாராக இருக்கும்படி மு.க. அழகிரி, ஆ.ராசா, தயாநிதி மாறன், எஸ்.எஸ். பழனி மாணிக்கம், நெப்போலியன், ஜெகத்ரட்சகன், காந்தி செல்வன் ஆகியோருக்கு மத்திய அரசிடமிருந்து தகவல் வந்தது. ஆனால் திடீரென்று பதவியேற்பு விழா தள்ளிவைக்கப்பட்டுள்ளது எனத் தெரிகிறது.

# உலக தரத்தில் ஆவடியில் உருவாக்கப்பட்ட டாங்கிகள் இராணுவத்திடம் ஒப்படைப்பு

சென்னை, மே 27

உலகத்தரத்தில் உருவாக்கப்பட்ட 16 அர்ஜுன் டாங்கிகள் இந்திய இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது - என்று பாதுகாப்புத் துறை விஞ்ஞானி சிவதாணு பிள்ளை கூறினார்.

சென்னை ஆவடியில் உள்ள ஆயுதத் தொழிற்சாலையில் நவீன ரக அர்ஜுன் டாங்கிகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. இதை வாங்கி உபயோகித்த இராணுவம், சில மாற்றங்களைச் செய்து தரக்கோரியது. இதையடுத்து, தண்ணீரை கடக்கும் திறன் உள்ளிட்ட சில மாற்றங்கள் செய்து நிரூபிக்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து, 124 டாங்கிகள் தயாரிக்க இராணுவம் ஆணை வழங்கியது. ஏற்கனவே 29 டாங்கிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மேலும், 16 டாங்கிகள் தயாரிக்கும் பணி முடிக்கப்பட்டது. இந்த டாங்கிகள் வேகமாகச் செல்வது, குறி தவறாமல் சுடுவது, தகுந்த பாதுகாப்பு கொண்ட பீரங்கித் துப்பாக்கி உள்ளிட்ட பல அம்சங்கள் கொண்டன. இந்த டாங்கிகளை இராணுவத்திடம் ஒப்படைக்கும் நிகழ்ச்சி, ஆவடியில் உள்ள ஆயுதத் தொழிற்சாலையில் நேற்றுமுன்தினம் நடந்தது.

விழாவுக்கு, கனரக வாகனங்களின் தொழிற்சாலை பொது மேலாளர் ராஜேஷ் கே.ஜெயின் தலைமை வகித்தார். கூடுதல் பொது மேலாளர் பாண்டே முன்னிலை வகித்தார்.

இராணுவ இயந்திரப் பிரிவின் பொது இயக்குநர் பரத்வாஜியிடம், அர்ஜுன் டாங்கிகளை கூடுதல் இயக்குநர் ஜெனரல் சந்திரசேகர் ஒப்படைத்தார்.

பாதுகாப்புத்துறை விஞ்ஞானி சிவதாணு பிள்ளை, அர்ஜுன் டாங்கிகளை கொடியசைத்து வழியனுப்பி வைத்து பேசுகையில் -

ஒரு டைட் பிரிவுக்குத் தேவையான 45 அர்ஜுன் டாங்கிகள் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 79 டாங்கிகள் 2010ஆம் ஆண்டில் வழங்கப்படும் - என்றார்.



சென்னை ஆவடி ஆயுதத் தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்ட 16 நவீன ரக அர்ஜுன் டாங்கிகள் இந்திய இராணுவத்திடம் நேற்று ஒப்படைக்கப்பட்டன. இதற்காக, மலர்களால் அலங்கரிக்கப்பட்ட இராணுவ டாங்கிகளைப் படத்தில் காண்க.

# ஈழத் தமிழருக்கு சமவுரிமை வழங்குமாறு இலங்கையை இந்தியா கோர வேண்டும்

## சரத்குமார் வலியுறுத்து

சென்னை, மே 27



இலங்கைத் தமிழர் களுக்கு சம உரிமை கிடைக்க இலங்கை அரசை இந்தியா நிர்பந்திக்க வேண்டும் - என்று அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சித் தலைவர் சரத்குமார் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இலங்கைத் தமிழர்களுக்கு சம உரிமை கிடைக்க இலங்கை அரசை இந்தியா நிர்பந்திக்க வேண்டும். இதனை முதல்வர் கருணாநிதி வலியுறுத்த வேண்டும்.

இலங்கைத் தமிழர்களுக்காக இந்தியா அளிக்கும் நிதியுதவி முறையாகச் செலவழிக்கப்படுகிறதா என்பதை கண்காணிக்க அனைத்துக் கட்சிக் குழுவை மத்திய அரசு அமைக்க வேண்டும்.

போர் நடந்த பகுதிகளில் உண்மையைக் கண்டறிய இந்தியத் தமிழர்களைக் கொண்ட குழுவை இலங்கைக்கு அனுப்ப வேண்டும் - என்றுள்ளது.

# பஞ்சாபில் வெடித்தது கலவரம் பஸ்கள், ரயிலுக்குத் தீ வைப்பு

## துப்பாக்கிச் சூட்டில் 2 பேர் பலி

ஜலந்தர், மே 27

ஆஸ்திரியாவில் மர்ம நபர்களால் தாக்கப்பட்ட சீக்கிய மதகுரு நேற்றுமுன்தினம் காலை இறந்ததையடுத்து பஞ்சாப் முழுவதும் வன்முறை வெடித்தது. கடைகளும், வாகனங்களும் அடித்து நொறுக்கப்பட்டன. பஸ், ரயில்களுக்கு தீ வைக்கப்பட்டன. கலவரத்தை ஒடுக்க இராணுவம் வரவழைக்கப்பட்டது. வன்முறையாளர்கள் மீது துப்பாக்கி சூடு நடத்தப்பட்டதில் 2 பேர் பலியாகினர்.

சீக்கியர்களில் தேரா சச்சா என்ற பிரிவினர் தனி அமைப்பாக இயங்கி வருகின்றனர். இந்த பிரிவுக்கென தனி மதகுருக்கள் உள்ளனர். இவர்களுக்கும் இதர சீக்கியர்களுக்கும் அடிக்கடி மோதல் ஏற்படும். இந்த அமைப்பைச் சேர்ந்த மதகுருக்கள் ராமானந்த், நிரஞ்சன் தாஸ் ஆகியோர் சமீபத்தில் ஆஸ்திரியத் தலைநகர் வியன்னாவுக்குச் சென்றனர். அங்குள்ள குருத்வாராவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிரசங்கம் செய்தனர். இதை 200இற்கும் அதிகமான சீக்கியர்கள் கேட்டுக் கொண்டிருந்தனர்.

அப்போது திடீரென கூட்டத்துக்குள் 5 சீக்கியர் புகுந்தனர். ராமானந்த், நிரஞ்சன் தாஸை கத்தியால் சரமாரியாகக் குத்தினர். துப்பாக்கியால் சுட்டனர். இருவரும் ரத்த வெள்ளத்தில் விழுந்தனர். தடுக்க வந்தவர்களையும் அந்த நபர்கள் தாக்கினர். இதில் 30 பேர் காயம் அடைந்தனர்.

தகவல் அறிந்து அங்கு விரைந்து வந்த பொலிஸார், தாக்குதல் நடத்தியவர்களை கைது செய்தனர். காயம் அடைந்தவர்களை உடனடியாக வைத்தியசாலையில் சேர்த்தனர்.

ஆஸ்திரியாவில் தேரா சச்சா குருமார்கள் தாக்கப்பட்ட தகவல் பஞ்சாபில் பரவியதையடுத்து, தேரா பிரிவினர் அதிகம் வசிக்கும் இடங்களில் பதற்றம் தொற்றிக்கொண்டது. ஜலந்தர் நகர வீதிகளில் ஆயிரக்கணக்கான தேரா ...ர்கள் குவிந்தனர். ... வழியாகச் சென்ற பஸ், லொறிகளை தீ வைத்துக் கொளுத்தினர்.

இதற்கிடையில், வியன்னா வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருந்த குரு ராமானந்த் நேற்றுமுன்தினம் காலை இறந்தார். இதைத்தொடர்ந்து பஞ்சாப் முழுவதும் நேற்றுமுன்தினம் காலை கலவரம் பரவியது, பல இடங்களில் வாகனங்கள் எரிக்கப்பட்டன. கடைகள் அடித்து நொறுக்கப்பட்டன. ஜலந்தரை அடுத்த லம்ப்ரா என்ற இடத்தில் கலவரக்காரர்களை ஒடுக்க பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் 2 பேர் பலியாகினர். பதற்றம் அதிகமாக உள்ள பகுதிகளில் இராணுவத்தினர் நிறுத்தப்பட்டுள்ளனர். வன்முறையாளர்களை கண்டதும் சுட உத்தரவிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் சேவைக்கான பதவி உயர்வுகளை சேவைமூப்பு அடிப்படையில் வழங்க ஏற்பாடு

## இரண்டாம் தவணை முடிவதற்குமுன் நியமனம்

அச்சுவேலி,மே27

இலங்கை அதிபர் சேவையில் உள்ளவர்களுக்கான பதவி உயர்வுகள் பாடசாலைகளின் அதிபர் ஆளணி பதவி வெற்றிடங்களுக்கு ஏற்ப திறமை, சேவை மூப்பு அடிப்படையில் நிரப்பப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளைக் க்ல்வி அமைச்சு மேற்கொண்டு வருகின்றது.

அதிபர் பதவியில் உள்ள வெற்றிடங்களை நிரப்பும்போது 60 வீதம் பரீட்சை மூலமும், 40 வீதம் திறமை, சேவைமூப்பு அடிப்படையிலும் நிறைவுசெய்யப்பட வேண்டும் என்ற வரையறை உள்ளபோதிலும் -

திறமை, சேவைமூப்பு அடிப்படையில் ப்ாடசாலையில் உள்ள பதவி வெற்றிடங்களைக் கருத்திற்கொண்டு பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான அனுமதியை அமைச்சரவைப் பத்திரங்கள் மூலம் கல்வி அமைச்சின் செயலாளருக்கு வழங்கியிருப்பதை அடுத்து கல்வி அமைச்சு பதவி உயர்வுகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

அதிபர் சேவை வகுப்பு 2:II பதவியில் ஆயிரத்து 918 வெற்றிடங்கள் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையிலும்-

அதிபர் சேவை வகுப்பு 3 பதவியில் குறித்த எண்ணிக்கையானோர் கடந்த வருடம் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையிலும் -

நியமிக்கப்படுவதுடன் ஏனைய பதவி வெற்றிடங்கள் திறமை, சேவைமூப்பு அடிப்படையில் நிரப்பப்படவுள்ளன.

கடந்த 13 வருடங்களாக அதிபர் பதவி வெற்றிடங்கள் உரிய தர நிலையில் நிரப்பப்படாமல் பாடசாலைகளின் முகாமைத்துவம் முன்னெடுக்கப்படுவதும், அதனால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் தொடர்பாகவும் இலங்கை தரம்பெற்ற அதிபர்கள் சேவைச் சங்கம் அண்மையில் கல்வி அமைச்சர் சுசில் பிறேம் ஜெயந்தவைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தது.

தரம் பெற்ற அதிபர்கள் சேவைச் சங்கத்துடன் நடத்திய பேச்சுவார்த்தையில் ஏற்றுக்கொண்ட விடயங்களை கல்வி அமைச்சு நிறைவேற்ற ஏற்பாடு செய்திருப்பதாகத் தரம் பெற்ற அதிபர்கள் சேவைச் சங்கத்தின் உப தலைவர் அன்பு ஜவகர்ஷா தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்:

இலங்கை அதிபர் சேவை தரம் I இல் ஆயிரத்து 54 பதவி வெற்றிடங்களும், அதிபர் சேவை வகுப்பு 2:I இல் 2 ஆயிரத்து 973 பதவி வெற்றிடங்களும் அதிபர் சேவை 2:IIஇல் 3 ஆயிரத்து 255 பதவி வெற்றிடங்களும் அதிபர் சேவை வகுப்பு 3 இல் 2 ஆயிரத்து 281 பதவி வெற்றிடங்களும் பூர்த்தி செய்யப்படாமல் இருக்கின்றன - என்று தெரிவித்துள்ளார்.

இலங்கைப் பொதுச் சேவைகள் ஆணைக் குழு உறுப்பினர்கள் ஏப்ரல் 8ஆம் திகதியுடன் பதவி இழந்திருப்பதால் புதிய உறுப்பினர்கள் பதவி ஏற்கும் வரை கல்வி அமைச்சின் செயலாளருக்கு அமைச்சரவையில் பதவி உயர்வுகள் வழங்குவதற்கான அதிகாரம் வழங்கப்பட்டிருப்பதால் இரண்டாம் தவணை முடிவதற்கு முன்னர் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டு முடிக்கப்படலாம் எனக் கூறப்படுகின்றது (1-11)




கோண்டாவில் லயன்ஸ் கழகத்தினரால் கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயத்தில் அண்மையில் இலவச மூக்குக்கண்ணாடி வழங்கல் இடம்பெற்றது.

பயனாளி ஒருவருக்குக் கண்ணாடி வழங்கப்படுவதையும் கழகத் தலைவர் லயன் சீமாட்டி வ.சோமசூரியசிங்கம், உபதலைவர் லயன் கே.எம்.இராஜேந்திரன், மாவட்ட இணைப்பாளர் லயன் கே.எம்.பத்மநாதன், சங்கத் தலைவர் லயன் எஸ்.சதீஸ், கிராம சேவையாளர் எஸ்.பன்னீர்ச்செல்வம், பொருளாளர் லயன் எஸ்.வாமதேவன், செயலாளர் லயன் எஸ்.விஜயகுமார் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## கச்சாய், கைதடி நூலகங்களுக்கு விருதுகள் கிடைத்தன

யாழ்ப்பாணம்,மே27

தேசிய நூலக ஆவணமாக்கல் சபையினால் கடந்த வருடம் நடத்தப்பட்ட தேசிய வாசிப்பு மாத செயற்றிட்டங்களைச் சிறந்த முறையில் செயற்படுத்திய சாவகச்சேரி பிரதேச சபையின் கைதடி,கச்சாய் ஆகிய பொது நூலகங்கள் விருதுகளைப் பெற்றன.

கடந்த வாரம் தேசிய நூலக ஆவணமர்க்கல் சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற நிகழ்வில் விருதுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (1-207)

## பரிசாரகர்களுக்கான பயிற்சி நெறி

நாவற்குழி,மே27

கைதடி சித்த ஆயுள்வேத போதனா வைத்தியசாலை மற்றும் வவுனியா சித்த ஆயுள்வேத வைத்தியசாலை ஆகியவற்றில் கடமை புரியும் பரிசாரகர்களுக்கான பயிற்சிப்பட்டறை ஒன்று கடந்த 18ஆம் திகதி தொடக்கம் கைதடி சித்த ஆயுள்வேத போதனா வைத்தியசாலையில் நடைபெற்று வருகிறது.

இப்பயிற்சிநெறியில் வவுனியா சித்த ஆயுள்வேத வைத்தியசாலையைச் சேர்ந்த 13 பேரும் கைதடி சித்த ஆயுள்வேத போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த 20 பேரும் கலந்துகொள்கின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சிநெறி தொடர்ந்து 3 மாதங்கள் வரை நடைபெறுமெனவும் வைத்தியசாலை வட்டாரங்களால் அறிவிக்கப்பட்டுள்ளது. (1-288)

## தென்மராட்சி லயன்ஸ் சிறந்த கழகமாகத் தெரிவு

யாழ்ப்பாணம்,மே27

சர்வதேச லயன்ஸ் கழக 306பி1 மாவட்டத்தின் கழகங்களுக்கிடையில் கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட சேவைகளின் அடிப்படையில் பிராந்தியம் எட்டில் சிறந்த கழகமாகத் தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகம் தெரிவுசெய்யப்பட்டது.

அத்துடன் 'நிஷா' புயல் காற்றினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவியமை, படையினரால் விடுவிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து வந்த மக்களுக்கு உடனடி உதவிகள் போன்ற சேவைகளுக்காக மாவட்ட மட்டத்தில் சிறப்பு விருதுகளைப் பெற்றது.

சேவைகளுக்கான விருதுகள் கொழும்பில் நடைபெற்ற கழக மாநாட்டில் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (203-207)

## உணவகங்களின் சுகாதார நடைமுறையில் உரிய வழிமுறைகள் கையாளப்படவேண்டும்

### யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரி அறிவுறுத்து

நல்லூர்,மே27

உணவகங்களில் சுகாதார நடைமுறைகளில் தவறுகள் ஏற்படாதவாறு உரிய வழிமுறைகளைக் கையாளவேண்டும் என்று யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரி உணவகங்களின் உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

உணவகங்களின் உரிமையாளர்களுடனான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலின் போதே மேற்கண்ட அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலின்போது மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

உணவகங்களில் உரிய வகையில் சுகாதார நடைமுறைகள் கையாளப்படவேண்டியது அவசியமாகும்.

அதுமட்டுமன்றி ஊழியர்களின் சுகாதாரம் குறித்தும் கவனம் எடுக்கவேண்டும் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

சுகாதார நிலைமைகளை ஆராய்வதற்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உணவு நிலையங்களுக்குத் திடீரென விஜயம் செய்வர்.

இதன்போது சுகாதாரச் சீர்கேடான விடயங்கள் கண்டறியப்படின் உரிய உணவகங்களின் உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (203-111)

## அங்கவீனமுற்ற நால்... சக்கர நாற்காலிகள்

யாழ்ப்பாணம்,மே27

சமூக சேவைகள் திணைக்களத்தினர் யாழ்.மாவட்டத்தில் அங்கவீனமுற்ற நால்வருக்கு மூன்று சில்லு வண்டிகளையும், மூவருக்குச் சக்கர நாற்காலிகளையும், அந்தந்தப் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுகள் ஊடாக வழங்கவுள்ளனர்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் சின்னத்தம்பி நல்லையா, றொபின்சன் பவிந்தினி ஆகியோருக்கும் உடுவில் பிரதேசத்தில் சுப்பையா சண்முகலிங்கம், பாண்டியன் பெரியதம்பி ஆகியோருக்கு மூன்று சில்லு வண்டிகளையும் -

தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த நாகராசா சர்மிளா, பருத்தித்துறைப் பிரதேசத்தைச் சேர்ந்த கந்தவனம் கணபதிப்பிள்ளை, சண்டிலிப்பாய் பிரதேசத்தைச் சேர்ந்த கிருஷ்ணன் ரஞ்சித் ஆகியோருக்கு சக்கர நாற்காலியும் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (1-207)

## கடற்றொழிலாளருக்கு வலைகள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,மே27

அல்லைப்பிட்டி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினூடாக ஐ.ஓ.எம் நிறுவனம் பயனாளிகளுக்கு வலைகளை விநியோகித்துள்ளது.

52 பயனாளிகளுக்கு இந்த வலைகள் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (203-224)

## விளையாட்டு மைதானம் புனரமைக்கப்படுகின்றது

மானிப்பாய்,மே27

நவாலி அட்டகிரி சைவவித்தியாசாலை விளையாட்டு மைதானம் விரைவில் மீள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

பாடசாலை அதிபர் இதற்கான முழு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

நவாலி அட்டகிரி சைவவித்தியாசாலை விளையாட்டு மைதானம் பாடசாலை மாணவர்களின் விளையாட்டுக்குரிய சகல வசதிகளையும் கொண்ட வடிவில் மாற்றியமைப்பதுடன் -

சுற்றுமதில் அமைப்பதற்கும் அதிபர் நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (1-95)




## கட்டட நிர்மாணப் பயிற்சி போதனாசிரியர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம்,மே27

தென்மராட்சிப் பிரதேச தொழிற் பயிற்சி பிரிவினரால் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள கட்டட நிர்மாணப் பயிற்சிநெறிப் போதனாசிரியர் பதவிக்குத் தகைமையுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தகைமையுள்ளவர்கள் சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமைக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார். (1-207)



நாவற்குழி அறிவொளி மன்ற அறநெறிப் பாடசாலையின் 20ஆவது ஆண்டு நிறைவு விழாவும், ''உள்ளம் பெருங் கோயில்'' நூல் வெளியீட்டு விழாவும் அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இந்துசமய கலாசாரத் திணைக்கள யாழ்.பிராந்திய இணைப்பாளர் க.தெய்வேந்திரன் மாணவி ஒருவருக்குப் பரிசில் வழங்குவதையும் ''உள்ளம் பெருங் கோயில்'' நூலினை கனகரத்தினம் ம.ம.வித்தியாலய ஆசிரியர் நி.சரவணபவன் வெளியிட்டு வைக்க நூலின் முதற்பிரதியை நாவற்குழி கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளர் தி.தங்கவேலு பெற்றுக்கொள்வதையும் படங்களில் காணலாம். (9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாரந்தனை - சரவணை கர்ணந்தோட்டம் ஸ்ரீ சிவசுப்பிரமணியசுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவம் - 2009

கொடியேற்றம் : 28.05.2009 வியாழக்கிழமை மு.ப. 10.30 மணி

தேர்த்திருவிழா : 06.06.2009 சனிக்கிழமை மு.ப. 10.30 மணி

தீர்த்தத் திருவிழா: 07.06.2009 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.30 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
தேர்த்திருப்பணிக்கு வாரிவழங்குமாறு தங்கள் கரங்களை எதிர்பார்க்கின்றோம்.

குறிப்பு: வழமைபோல் சமய அறிவுப் போட்டிகள் மஹோற்சவ காலங்களில் இடம்பெறும். மாணவர்கள் விண்ணப்பம் செய்யவும்.

ஆலய பரிபாலன சபையினர்.

(85891)



# பொதுப்பணியிலும் தளராது ஈடுபட்டு உழைத்த இறைபக்தியாளர் திரு.முருகேசு எசேக்கியல்

## மெதடிஸ்த குருமுதல்வரின் ஆசிகள்



கடந்த நாற்பது ஆண்டுகளாக, பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் அர்ப்பணிப்புடன் ஊழியம் புரிந்து ஓய்வுபெறும் திரு.முருகேசு எசேக்கியல் அவர்களை வாழ்த்தி ஆசி கூறுவதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

திரு.எசேக்கியல் அவர்கள் அரசாங்க மருத்துவ மனையில் ஊழியம் புரிந்த கால கட்டத்தில் தன் ஊழியத்திற்காக உழைக்கும் பணியுடன் மாத்திரம் நின்றுவிடாது மந்திகை மருத்துவ வளாகத்தில் ஜெப ஆலயம் நிறுவுவதற்கு பாடுபட்டார். இவ் இறை பணி சேவைக் குழுவிற்கு செயலாளராகப் பணி புரிந்தார். இலங்கை மெதடிஸ்த திருச்சபையில் முழு அருளுரையாளராக சிறப்பான முறையில் ஆன்மீக சேவையில் மனப்பூரிப்போடும் பணியாற்றுகிறார்.

பருத்தித்துறை கட்டைவேலி மெதடிஸ்த திருச்சபை சேகரத்தின் சேகர உக்கிராணக்காரராக பொறுமையுடன் பணி செய்கிறார். கட்டைவேலி Y.M.C.A இயக்கத்தில் ஆலோசகராகவும் பணி செய்கிறார்.

இவையாவும் அரசாங்க ஊழியனாக இருந்த காலத்தில், தியாக மனப்பான்மையுடனும், இறை பக்தியுடனும் சகிப்புத்தன்மையுடனும் திருச்சபை வாழ்வில் புறத்தியார் விரோதம், உள்ளானவரின் கிலேசம் போன்ற பிரச்சினை சூழ்நிலைகளிலும் மனம் தளராது, திருச்சபையின் தற்கால அமைப்பு மாற்றங்களை நன்கு புரிந்தவராக, பரந்த மனப்பான்மையுடையவராகப் பணி செய்தார்.

மேலும் வன்செயல்கள் பெருக்கெடுத்த காலங்களிலும் கோரமான யுத்த சூழ்நிலைகளிலும் மனந்தளராது ஆன்மீக பணியும் சமுதாயப்பணியும் செய்தார்.

ஆகவே எல்லாம் வல்ல தெய்வம் அவருக்கு நீண்ட ஆயுளையும், உடல் ஆரோக்கியத்தையும் தூய ஆவியானவரின் வல்லமையையும் கொடுத்து எதிர்காலத்தில் இரட்டிப்பாக ஆன்மீக சமுதாயப் பணிகளைச் செய்ய ஆற்றலையும் வலிமையையும் அருள்பாலிக்க வேண்டுமென்று அடியேன் பிரார்த்தனை செய்கின்றேன்.

திரு.எசேக்கியலைப் பாராட்டி வாழ்த்துகிறேன். இறை ஆசி அவரோடும், குடும்பத்தினரோடும் என்றும் இருப்பதாக.

வண. S.K.கதிர்காமர்
குரு முதல்வர், யாழ்.மெதடிஸ்த சேகரம்

(85594)



அன்னையின் பக்தர்களே! திரண்டு வாருங்கள்



# கரம்பொன் அன்னை வேளாங்கன்னி மாதா ஆலய விழா - 30.05.2009

27 புதன்கிழமை மாலை 4.30 மணி
செபமாலையும் திருப்பலியும்

28 வியாழக்கிழமை மாலை 4.30 மணி
செபமாலையும் திருப்பலியும்

29 வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணி
திருப்பலியும் நற்கருணை ஆராதனையும்

30 சனிக்கிழமை காலை 7 மணி
திருவிழா திருப்பலி

அன்புடன் அழைக்கின்றோம்.

பஸ் ரூட் 780, 778, 776. பங்குத்தந்தை.

(அ/558696)

விளம்பர அனுசரணை: A.C.D, Jaffna


# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம் மே 27

திருநெல்வேலி, இராஜவீதி ஸ்ரீ சக்தி வேல் முருகன் ஆலயத்தின் அலங்காரத் திருவிழா நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஆரம்பமாகியது. தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 6 ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு பிராயசித்த அபிஷேகமும் அன்றைய தினம் நண்பகல் 12 மணிக்கு மகேஸ்வர பூசையும் இடம் பெறவுள்ளன. (201)

* * *

சங்கரத்தை, பிட்டியம்பதி வீரபத்திரர் சமேத பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் அஷ்டோத்திர சகஸ்ர சங்காபிஷேகத்தின் பூர்வாங்கக் கிரியைகள் இன்று புதன்கிழமை பி.ப.4 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

நாளை வியாழக்கிழமை காலை 6 மணி முதல் சங்காபிஷேக பூசைகள், அபிஷேகங்கள் இடம்பெறவுள்ளன. (201)

* * *

யாழ்ப்பாணம், மே 27

திருநெல்வேலி, தலங்காவற் பிள்ளையார் ஆலயத்தில் தொடர்ந்து நடைபெற்று வந்த கந்தபுராணப் படனம் இன்று புதன்கிழமையுடன் நிறைவுபெறவுள்ளது. (201)

யாழ்ப்பாணம், மே 27

கோண்டாவில் மேற்கு ஸ்ரீ சந்திரசேகர விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 4 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத் திரு விழாவும் இடம்பெறவுள்ளன. (201-236)

* * *

வடமராட்சி மே 27

அல்வாய் வடக்கு, குருக்கட்டு அரசடி விநாயகர் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு சமுத்திரத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (201-236)

* * *

யாழ்ப்பாணம், மே 27

நாரந்தனை- சரவணை கர்ணந்தோட்டம் சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை வியாழக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 12 தினங்கள் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு தேர்த்திருவிழா வும் மறுநாள் ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (201)

* * *

யாழ்ப்பாணம், மே 27

வண்ணைநகர் மஹாமாரி அம்பாள் ஆலய அலங்காரத் திருவிழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 11ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப. 3 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம் பெற்று தேர்த் திருவிழா நடைபெறும். மறுநாள் வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. அதனையடுத்து 13 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு சங்காபிஷேகம் இடம்பெறவுள்ளது. (201)

* * *

யாழ்ப்பாணம், மே 27

காரைநகர், பாலாவோடை குறிஞ்சாக்குளி முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் சிறப்பாக நடைபெறவுள்ளது.

பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா எதிர்வரும் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கும் தீர்த்தத் திருவிழா மறுநாள் சனிக்கிழமை இடம்பெறவுள்ளது. (201-250)

யாழ்ப்பாணம், மே 27

காரைநகர், மடத்துக்கரை முத்துமாரியம்மன் ஆலய வருடாந்தப் பொங்கல் திருவிழா நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை தொடக்கம் பொங்கல் இடம்பெற்று தொடர்ந்து விசேட அபிஷேக பூசை வழிபாடுகளும் இடம்பெறும். (201-250)

* * *

யாழ்ப்பாணம், மே 27

உரும்பிராய் பார்வதவர்த்தனி அம்மன் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 5 ஆம் திகதி சப்பரத்திருவிழாவும் 6 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (201)

* * *

யாழ்ப்பாணம், மே 27

துன்னாலை அல்லையம்பதி ஸ்ரீ சிவசுப்பிரமணியர் ஆலய வருடாந்தப் பெரு திருவிழா இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 4 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. திருவிழா நடைபெறும் பத்துத் தினங்களும் மகேஸ்வரப்பூசை இடம்பெறும்.

மேற்படி ஆலயத்துக்கென புதிதாக நிர்மாணிக்கப்பட்ட புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட நிகழ்வு எதிர்வரும் 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது. (201)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 29 | 07 |
| 03 | 06 |
| 1958 | 2008 |

## அமரர் சின்னத்தம்பி மனோகரராசா

திதி: சதுர்த்தி (27.05.2009)

தீராத வேதனையால் தினம் தினம் துடிக்கின்றோம்
ஆண்டொன்று சென்றபோதும் ஆறவில்லை உன் நினைவு
அன்பான குணமுடனும் அழகான சிரிப்புடனும்
பாசமாய் அரவணைத்த அப்பாவே!
என்றும் மறந்திடுமோ உம் நினைவை.

புத்தூர் வடக்கு, புத்தூர். குடும்பத்தினர்.

(அ/558715)



# மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை சற்குணன்

அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும், லண்டனை வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சற்குணன் 25.05.2009 திங்கட்கிழமை லண்டனில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - தெய்வானை தம்பதியரின் புத்திரனும் காலஞ்சென்ற ஜராங்கனியின் ஆருயிர் கணவரும் மேரி லக்சுமியின் பாசமிகு தகப்பனும் சந்திரன் (பொறியியலாளர் அவுஸ்திரேலியா), சறோஜினி (B.Sc. ஆசிரியை - அவுஸ்திரேலியா), நற்குணன் (பொறியியலாளர் - லண்டன்), குணபாலன் (பேபி), உத்தமகுணன் (பொறியியலாளர் - லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நந்தாவில் லேன், கொக்குவில். (85598)
க.குணபாலன் (பேபி), சகோதரன்.



# ஓராண்டு நினைவுத் துளிகள்



## அமரர் பழனி ஸ்ரீதரன்

பிறப்பு 30.08.1961 இறப்பு 07.06.2008

உங்கள் தரிசனம் கண்டு ஆண்டு ஒன்று சென்று விட்டது
நாளாந்தம் உங்கள் நினைவில் உருகித் தவிக்கின்றோம்
உங்கள் கதைகள் எல்லாம் எம் நெஞ்சைத் தொடாத நேரம் இல்லை
மீண்டும் உங்களைக் காணத் தவிக்கின்றோம் அப்பா...

கோணப்புலம் ஒழுங்கை, மல்லாகம்.

உங்கள் நினைவில் வாடும்: குடும்பத்தினர்.



# நீங்கா நினைவலைகள்

2ஆம் வருட நினைவஞ்சலி 55ஆம் நாள் நினைவஞ்சலி





| | |
|---|---|
| மண்ணில் 30 . 11 . 1946 | மண்ணில் 19 . 04 . 1967 |
| விண்ணில் 19 . 05 . 2007 | விண்ணில் 03 . 04 . 2009 |

## திருமதி பரமேஸ்வரி சண்முகலிங்கம் திருமதி கயல்விழி ஸ்ரீபதி

திதி: சதுர்த்தி (27.05.2009)

உரமாய் நின்றெம்மை உருவாக்கினார்கள்
உயிரோடு உயிராக உறவாடினார்கள்
வரமான தாய்களாக வழிகாட்டினார்கள் - இன்று
வாட்டத்தில் எம்மை வைத்து தனியேபோயினார்கள்.

ச.சண்முகலிங்கம், [illegible], கச்சாய் வீதி, சாவகச்சேரி.

மகள்மார், கிரித்திகா, சங்கவி.

(85585)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் ஆலய
# தேர்த்திருவிழா சிறப்பு மலர்
## 27.05.2009

## தேர் தரிசிப்போர் அனைவருக்கும் பெருமானின் அருள் கிடைக்கும்



இன்று இந்த ஈழத்திரு நாட்டின் தலைசிறந்த வரலாற்றுப் புகழ்மிக்க எங்கள் பரராஜசேகரப் பிள்ளையார் கோயிலின் வருடாந்த மகோற்சவத்தில் பத்தாம் திருவிழாவான திருத் தேர் உற்சவம் நடைபெறுகின்றது. இந்த ஆலயத்தில்தான் முதன் முதலாக மூன்று சித்திரத்தேர்களிலும் முறையே விநாயகர், சுப்பிரமணியர், சண்டேஸ்வரர் ஆகிய திருத்தெய்வங்கள் தனித்தனியான சிங்காசனங்களில் எழுந்தருளி வீதி வலம் வரும் அருள் காட்சியை பார்க்கக்கூடியதாக இருந்தது. இறைவனின் ஐந்தொழில்களைக் குறிக்கும் இம்மகோற்சவக் கிரியைகளில் அழித்தல் தொழிலை எடுத்துக் காட்டுகின்றது இந்தத் தேர்த் திருவிழா. பெரிய சப்பறம் கோபுரத்தின் தோற்றத்தையும், தேர் மூலஸ்தானத்தின் தோற்றத்தையும் கொண்டிருக்கிறது. எனவே தேரிலே சுவாமி வீதிவலம் வரும்போது எல்லோரும் மூலஸ்தானத்தில் இருக்கின்ற மூலவரை தரிசிக்கும் பாக்கியம் கிடைக்கின்றது. எனவே, இந்த தேர்த் திருவிழாவை தரிசிக்க வரும் எல்லோருக்கும் எம்பெருமானாகிய ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையாரின் திருவருள் கிடைக்க வேண்டுகின்றேன்.

-சிவஸ்ரீ சோ.அரவிந்தக்குருக்கள்.

## ஆலய வரலாறு

இணுவில் பரராஜசேகரர் ஆலயம் 1928ஆம் ஆண்டுக்கு முன்னர் சுண்ணாம்புக் கலவையால் கட்டப்பட்டிருந்தது.

நமது திருநாட்டை அந்நியரான போர்த்துக்கேயர் ஆட்சிபுரிந்த காலத்தில் தாக்கப்பட்டு கீலமுற்றுக் கிடந்தது.

இலங்கையைப் பொறுத்தவரையில் பழைய ஆலயங்கள் எல்லாம் போர்த்துக்கேயர்களால் இடித்து அழிக்கப்பட்டன. அதன் பின்னர் சாதாரண பக்தர்களே இணைந்து கோயில்களை அமைத்தார்கள். அந்த வகையில் இணுவை மக்கள் இணைந்து நான்கு திக்கிலும் நான்கு கோபுரங்களோடு சிற்பங்களைக் கொண்டும் ஓவியங்களைக் கொண்டும் அமைக்கப்பட்ட கலைக் கோயிலாக ஆன்மாக்களைக் களிப்படையச்செய்யும் ஆலயமாக விளங்குவது இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் ஆலயமாகும்.



காலத்திற்குக் காலம் திருப்பணி வேலைகள் நடைபெற்றுவந்தபோதிலும் 1928 ஆம் ஆண்டில் பாலஸ்தானம் செய்யப்பெற்று சிவாகம விதிகளுக்கும் சிற்பசாஸ்திர முறைகளுக்கும் அமையவே ஆலயத்தைப் பொழி கல்லினால் அமைப்பதற்குத் திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. இணுவில் வாழ் குடிமக்கள் ஒவ்வொருவரினதும் பங்களிப்பும் இவ்வாலயத் திருப்பணிக்கு உதவியது. திருப்பணி வேலைகள் ஓரளவு பூர்த்தியானதும் 1939 இல் சிவஸ்ரீ சதாசிவக் குருக்களின் தலைமையில் மிகத் துணிச்சலுடன் கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 48 நாள்கள் மண்டலாபிஷேகமும், பூசை வழிபாடுகளும் விழாக்களும் சிறப்பாக நடைபெற்று வந்தன.

ஆலயம் என்றால் அங்கு கிரியைகளும் வழிபாடும் மிக மிக இன்றியமையாத ஒன்றாகக் காணப்படவேண்டும். இதற்கு இலக்கணமாக விளங்கும் ஆலயங்களில் இதுவும் ஒன்றாகும்.

சைவசித்தாந்த சிரோன்மணியாய், சிவபூஜா துரந்தரராய் விளங்கி சிவஞானசித்தியாருக்கு விளக்கவுரை எழுதிய பாரத்துவாஜ கோத்திர வேதாகம விற்பன்னர் பிரம்மஸ்ரீ த.நடராஜ ஐயர் அவர்களின் வழித்தோன்றல்களான சிவஸ்ரீ சின்னையாக் குருக்கள், சிவஸ்ரீ சதாசிவக் குருக்கள், சிவஸ்ரீ சாம்பசிவக்குருக்கள், சிவஸ்ரீ வைத்தீஸ்வரக்குருக்கள் ஆகியோர் காலத்துக்குக் காலம் பூசைகளைப் பொறுப்பேற்றுச் சிறப்பாக நடத்தி வந்துள்ளனர். இவர்களுள் பிரம்மஸ்ரீ நடராஜ ஐயர் அவர்களின் பேரன் சிவஸ்ரீ சதாசிவக் குருக்கள் அவர்கள் பரராஜசேகரப் பிள்ளையார் கோயில் சிறப்புற விளங்கும் வண்ணம் பிரதம குருவாக இருந்து 1961 ஆம் ஆண்டு கும்பாபிஷேககத்தை ஆகம விதிப்படி திறம்பட நடத்தி இணுவில் வாழ் சைவப் பெருங்குடி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மீண்டும் இராஜகோபுரத்தினோடு கூடிய கும்பாபிஷேகம் 1972 ஆம் ஆண்டிலும், 1984 ஆம் ஆண்டிலும், 1997 ஆம் ஆண்டிலும் அடியார்களது அயராத முயற்சியால் நடைபெற்றன. காலத்திற்குக் காலம் ஆலயம் வளர்ச்சி கண்டது. கல்யாண மண்டபம், தீர்த்த மண்டபம், மணி மண்டபம் எனவும் பூசை வழிபாடுகள், விழாக்களினாலும் ஆலயம் பொலிவு பெற்றது. 1939 இல் இருந்து ஐந்து கும்பாபிஷேகங்களைக் கண்ட ஆலயம். 2009 பெப்ரவரி முதலாம் திகதி நடைபெற்ற கும்பாபிஷேகத்துடன் மேலும் புதுப்பொலிவு பெற்று நான்கு கோபுரங்களைத் தரிசிக்கும் வாய்ப்பை இறைவன் தந்துள்ளான்.

ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் இன்று [27.05.2009] புதன்கிழமை சித்திரத்தேரில் பவனிவந்து சகல மக்களுக்கும் அருள் பாலிப்பார். அத்தருணம் அடியார்கள் அவரது இஸ்டசித்தியைப் பெற்று ஏகுமாறு அன்புடன் வேண்டப்படுகிறீர்கள். ★★★★★★★★★★★★★★★★★

## தேர்த் திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்





கணேசன் சென்ரர்
புடவை விற்பனை & அழகு சாதனப்பொருள்கள்
கே.கே.எஸ். வீதி, இணுவில்.

அழகு சாதனப் பொருள்களை பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்
பெஷன் ஹவுஸ்
Fashion House
இல. 203, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

அருணகிரி ஸ்ரோர்ஸ் & மல்ரி ஸ்பொட்
ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோயிலடி, மானிப்பாய் வீதி, இணுவில்.

லிங்கம் கொமினிக்கேசன்
ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோயிலடி, மானிப்பாய் வீதி, இணுவில்.

லிங்கம் ஸ்ரோர்ஸ்
பல்பொருள் வாணிபம்
கே.கே.எஸ். வீதி, இணுவில்.

ராஜ் கிறீம் ஹவுஸ்
ஸ்பெஷல், நோமல், ஐஸ்கிறீம் வகைகள், குளிர்பான வகைகள், விசேட வைபவங்களுக்கு ஓடர் உணவு வகைகள் விசேடமாகச் செய்து தரப்படும்.
கே.கே.எஸ். வீதி, இணுவில்.

TELE SOON
ரெலி சூன்
Colombo - Technology
அனைத்து வகையான கையடக்கத் தொலைபேசி உபகரணங்கள் அனைத்தையும் கொழும்பு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
கே.கே.எஸ். வீதி, இணுவில்.

புதினப் பத்திரிகை முகவர்
கே.கே.எஸ். வீதி, இணுவில்.

ஆனந்தா கட்டடப் பொருள் வாணிபம்
கே.கே.எஸ். வீதி, இணுவில்.

மகேஸ் பல்பொருள் வாணிபம்
கால்நடை தீன் வகைகள், பாய், கடகம் என்பன நியாய விலைக்கு பெற்றுக்கொள்ளலாம்.
கே.கே.எஸ். வீதி, இணுவில்.

அமுதா வர்த்தக நிலையம்
பாடசாலை உபகரணங்கள் காகிதாதிகளை மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
கே.கே.எஸ். வீதி, இணுவில்.

கஜமுகன் மோட்டோஸ் அன் ஹாட்வெயார்
கட்டடப்பொருள்கள் மோட்டார் வாகனப் பொருள்கள் விற்பனையாளர்
கே.கே.எஸ். வீதி, இணுவில்.

நாதன் பிறதர்ஸ்
பல்பொருள் வாணிபம்
கே.கே.எஸ். வீதி, இணுவில்.

சிவசம்பு களஞ்சியம்
மருந்துக்கடை
இல.3, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்ணப் படங்களின் பதிவுப் பெட்டகம்



சாதனைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதம். நாளும் பொழுதும் பல்வேறு வகையான சாதனைகள் நிகழ்த்தப்பட்டுக்கொண்டேயிருக்கின்றன. சில சாதனைகள் இயல்பாகவே நடந்தேறினாலும், பெரும்பாலான சாதனைகள் சாதிக்க வேண்டும் என்ற விருப்பால் வலிந்து செய்யப்படுபவை. அவ்வகையில் கையால் அசைத்து ஒலிக்கப்படும் 'கைமணி' ஒன்றை, இடைவிடாது 28 மணித்தியாலங்கள் 50 நிமிடங்கள் 21 செக்கன்கள் அசைத்து ஒலிக்கச் செய்து கின்னஸ் சாதனையை 2005 ஆம் ஆண்டு ஜூலை 25 ஆம் திகதி கனடாவைச் சேர்ந்த ஜோய்டி பிறிஸ் என்பவர் நிகழ்த்தியுள்ளார். சாதனையாளர் தான் உலக சாதனை நிகழ்த்துவதற்கு பயன்படுத்திய கைமணி மற்றும் சாதனையை உறுதிப்படுத்தும் சான்றிதழுடன் படத்தில் உள்ளார்.

தொகுப்பு: ஒளண்யன்



இது வெளிநாட்டில் எடுக்கப்பட்ட படம் போல் தெரிகிறதா? அதுதான் இல்லை. எமது யாழ்ப்பாணத்திலே வசாவிளான் கிழக்கு குட்டியப்புலம் எனும் கிராமத்திலே வசிக்கும் வெ.மகராசா என்பவரது வளவில் எடுக்கப்பட்ட படம்தான் இது. இதில் உள்ள கள்ளிச் செடி கடந்த மூன்று வருடங்களுக்கு முன்பு நாட்டப்பட்டது. தற்போது அது வளர்ச்சி கண்டு 21 அடி உயரத்திற்கும் அப்பால் வளர்ந்து வருகிறது. இதன் அருகில் உள்ள பனை மரத்தின் நுனிப்பகுதியை நோக்கி இதன் பயணம் தொடர்கிறது. இது இன்னும் எதுவரை வளருமோ தெரியவில்லை?

(படமும், தகவலும்: கலைஞன்)



'கம்பனி நாடகம்' என நாடக வரலாற்று ஆசிரியர்களாலும், இசை நாடகம் என்று பலராலும் அழைக்கப்படுகின்ற மேற்படி நாடகங்களில் பயன்படுத்தப்படுகின்ற காட்சித் திரை ஒன்றினைப் படத்தில் பார்க்கிறீர்கள்.

முப்பரிமாண மாயையையும், காட்சி ஜாலத்தினையும் உருவாக்குதலை அடிப்படையாகக் கொண்ட, அதிகபட்ச மேற்கத்தைய பின்புலத்தில் இருந்து உருவாகியதும் கீழைத்தேயக் கலப்பினை உடையதுமான இத்திரைகள், அக்காலத்து ஓவியம், சினிமாக் காட்சி விதானிப்பு ஆகியவற்றின் மீதும் பெரியளவில் செல்வாக்கு செலுத்தியுள்ளன.

ஜனரஞ்சகக் காட்சிக் கலாசாரத்தில் இதனுடைய செல்வாக்கு இன்று வரைக்கும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ தொடர்ந்து வருகிறது. - பாலன்குட்டி.



'கத்தி' என்ற கருவி நம்மிடையே பன்முகப்பட்ட தேவைகளுக்காகப் பயன்பாட்டில் இருந்து வந்துள்ளது. போரிலே பயன்படுத்தப்படும் வாள்களின் அடிப்படையிலேயே கத்திகளின் உருவாக்கமும் நிகழ்ந்ததாகக் கருதப்படுகின்றது.

ஒரு ஆயுதமாக, வெட்டும் கருவியாக, பதவியின் குறியீடாக, வழிபாட்டுப் பொருளாக கத்தியின் பயன்பாடு நமது பண்பாட்டின் அடியாக வளர்ந்துகொண்டே செல்கின்றது. கத்தி என்பது ஒரு பயன்பாட்டுப் பொருளாக இருந்தாலும் கூட நமது முன்னோர்கள் தம்முடைய கலையுணர்வை இதன் உருவாக்கத்திலும் காட்டியுள்ளனர்கள். பல்வேறுபட்ட அலங்கார வடிவங்களுடன் செய்யப்பட்டு நமது முன்னோரின் பயன்பாட்டில் இருந்த கத்திகளை/ குறுவாள்களைப் படத்தில் காண்கிறீர்கள். (படமும் தகவலும்:-நேசன்)



நம்பிக்கைகளும் அதனடியாகப் பிறப்பெடுத்த சடங்குகளும் எங்களுடைய வாழ்வியல் அம்சங்களோடு பின்னிப்பிணைந்தவை. தமிழர்களின் பிரதான தொழிலாகக் கொள்ளப்படுகின்ற விவசாயத்தில் பல்வேறுபட்ட சடங்குகள் நிகழ்த்தப்படுவதுண்டு.


வேளாண்மையின் விளைவாகப் பெறப்படுகின்ற அறுவடை விவசாயிகளுக்கு மகிழ்ச்சியைத் தரும் ஒன்று. அந்த மகிழ்ச்சியான தருணத்தை தமக்குத் தந்த வயலுக்கும், இயற்கைச் சக்திகளுக்கும் நன்றி தெரிவித்து அறுவடை செய்யப்பட்ட களத்து மேட்டில் பொங்கல் பொங்கி வழிபடுவது இன்றளவும் இருந்து வருகின்ற சடங்காகும். அவ்வகையில் நெல் அறுவடை ஒன்றின் போது நிகழ்த்தப்படும் அறுவடைப் பொங்கலைப் படத்தில் காணலாம்.

(படமும் தகவலும்: [illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிஜ உதாரணங்களின்றி கணிதம் கற்பது சுலபம்

புதிய ஆய்வு



இரண்டு ஊர்களில் இருந்து புகைவண்டிகள் புறப்பட்டு ஒன்றையொன்று நோக்கி வந்து கொண்டிருக்கின்றன. அவை எங்கே எப்போது சந்திக்கும் என கணிப்பிடுவீர்களா? இது சற்றுக் கடினமான பிரச்சினை போல தோன்றவில்லையா?

உங்களுக்கோர் இனிய செய்தி! புகை வண்டி, கார், அப்பிள், தோடம்பழம் போன்ற நிஜ உதாரணங்களை உபயோகிக்காது கணிதம் கற்பது சுலபம் என சமீபத்திய ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது. கற்பனைப் பாத்திரங்களை வைத்து கணிதம் கற்கும் மாணவர்கள், நிஜ உருவங்களை வைத்துகற்பவர்களை விட,சிறப்பாகக் கற்க செய்யும் சாத்தியம் உண்டு என அந்த ஆய்வு மேலும் தெரிவிக்கிறது.




எஸ்.பேராசிரியன்

எமது ஆய்வில் கற்பனை உருவங்களை வைத்துக்கணிதம் படிக்கும் மாணவர்கள், அந்த விதிகளைப் பிற சந்தர்ப்பங்களுக்குப் பிரயோகிப்பதில் வெற்றி பெற்றார்கள். அதேவேளை நிஜப் பொருள்களை வைத்துக் கணிதம் கற்ற மாணவர்கள் அந்த அறிவை மாற்றம் செய்வதில் தவறியிருந்தனர்.

## தகவல் பெட்டகம்

பரிட்சியமான உண்மை உருக்களை வைத்து கணிதம் கற்பிக்கப்படும் போது மாணவர்கள் விரைவாக அதை கற்றுக் கொள்கின்றனர். எனவே தான் பல ஆசிரியர்கள் அந்த முறையைக் கையாளுகின்றனர். அது சுலபமாக இருக்கின்றது என அவர்கள் தெரிவித்தாலும், அதில் உண்மையில்லை,




இந்த அறிவை நிஜ உருவத்தை தவிர பிற நிலைமைகளுக்குப் பிரயோகிக்க முடிவதில்லை. எனவே எங்கள் ஆய்வு ஆசிரியர்களின் நெடு நாளைய நம்பிக்கையில் பெரும் சந்தேகத்தைக் கிளப்பியுள்ளது. இந்த நம்பிக்கை எவராலும் மறுதலிக்கப்படாமல், பரிசோதிக்கப்படாது மக்கள் மனதில் ஆழமாக வேரூன்றிவிட்டது என்கிறார் ஆய்வாளர் விலாடிமின்

பல்கலைக்கழக மாணவர்களை வைத்து இணைத்தல் தொடுத்தல் போன்ற அடிப்படைக் கணித இயல்புகளில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மூலகங்கள் மாறினாலும் முடிவு மாறாது. அதாவது (3+2) அல்லது (2+3) என எழுதினாலும் முடிவு மாறாது என்னும் கருவை வைத்துப் பரிசோதனைகள் செய்யப்பட்டன. சில மாணவர் கற்பனைக் குறியீடுகளை வைத்துக் கற்றலை மேற்கொண்டனர்.

அதே வேளை மற்றைய மாணவர்கள் நிஜ உருக்களை வைத்துக் கற்றலை மேற்கொண்டனர். நாம் எதிர்பார்த்த படியே முன்னையவர்கள் இந்தக் கொள்கைகளைப்பிற நிலைமைகளுக்குப் பிரயோகிக்கும் ஆற்றல் பெற்றிருந்தனர் என்கிறார் விலாடிமின்.★★★




# மனமே சாய்ந்துவிடாதே! 04



மனச்சோர்வுடைய வேறு சிலர் நோய்க்கடுமையால் எதுவும் பேசாமல் இருந்துவிடுவார்கள்.ஒரு சில முறைப்பாடுகளையே கூறுவார்கள். இது தம்மைத்தாமே அழித்துக்கொள்ளும் ஆபத்தானது. இவர்கள் பெரும்பாலும் தற்கொலை எண்ணம் உடையவர்களாக இருப்பார்கள். இவர்களை அடையாளம் கண்டு உதவுவது அவசியமாகும்.

இப்படியான நோயாளிகளை முதலில் சந்திக்கும் போதே அவர் தற்கொலை செய்யும் எண்ணம் கொண்டவரா என்பதை அறிந்து கொள்ள வேண்டும். தற்கொலை நிலைமையைக் கையாளக்கூடிய உளவளத் துணையாளர் ஒருவர் அவரிடம் பின்வரும் வினாக்களை மெதுவாகக் கேட்டு, அவரது நிலைப்பாட்டைக் கவனித்துக் கொள்ளலாம்.

★வாழ்க்கையில் வெறுப்பு ஏற்படுகிறதா?

★ இனி வாழ்வதில் பிரயோசனம் இல்லை என நினைக்கிறீர்களா?

★ எப்படியாவது செத்துப்போறது தான் நல்லது என நினைக்கிறீர்களா?

★தற்கொலை செய்து இவர்களுக்கு (பெற்றோர்களுக்கோ அல்லது வேறு யாருக்கோ) ஒரு பாடம் புகட்ட வேண்டும் என நினைக்கிறீர்களா?

★தற்கொலை செய்யும் திட்டம் ஏதாவது வைத்திருக்கிறீர்களா?

மிகக் கடுமையான மனச் சோர்வுடையோர் ஒன்றும் இல்லாத போதே ஏதோ தெரிகிறது, ஏதோ மணக்கிறது, ஏதோ கேட்கிறது என்ற உணர்வுகளை வெளிப்படுத்துவர். இவற்றை மாயப்புலனுணர்வுகள் (HALLUCINATIONS) என்பர்.

ஒருவரும் இல்லாத தனிமையில் இருக்கும் போது யாரோ உங்களுடன் கதைக்கிற மாதிரி குரல்கள் கேட்கிறதா? அந்தக் குரல்கள் உங்களைத் தற்கொலை செய்யும் படி தூண்டுகிறதா? தற்கொலை செய்யச் சொல்லும் அந்தக் குரல்களின் பணிப்பை உங்களால் எதிர்க்க முடிகிறதா? அல்லது ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறதா?

இப்படியான மனச்சோர்வுடையோர் இறப்புப் பற்றிய எண்ணங்களால் அலைக்கழிக்கப்பட்டு குழம்பிப் போயிருப்பர்.

### எவ்வாறு உதவலாம்

முன்னர் தற்கொலை முயற்சி (ATTEMTED SUICIDE) ஈடுபட்டிருந்தவரையும் தற்கொலை செய்யக் கூடியவர் என்று கண்டுகொண்டவரையும் தொடர்ந்து அவதானிக்க வேண்டும். குடும்ப உறுப்பினர்களினதும் நண்பர்களினதும் உதவியோடு அவர் தற்கொலை எண்ணத்தை விடும்வரை கவனித்துக்கொண்டே இருக்கவேண்டும். தனிமையில் விட்டுவிடக் கூடாது. இதே நேரத்தில் வேண்டிய வைத்திய சிகிச்சையையும் உளவளத்துணையையும் கொடுக்க வேண்டும்.

அவரைத் தொழிலிலோ மாணவராயின் படிப்பிலோ விரைவில் ஈடுபடச்செய்ய வேண்டும். இதற்கெல்லாம் மனச்சோர்வுதான் காரணம் என்றும், அது குணமாகும் போது அவர் பழைய நிலைக்குத் திரும்பிவிடுவார் என்றும் அவரது குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் சொல்ல வேண்டும்.

தற்கொலை முயற்சியில் ஈடுபடுபவர்கள் பலர் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு உடனடிக் கவனிப்பில் உயிர் தப்பியுள்ளனர்.

இப்படித்தான் ஓர் இளங் குடும்பப் பெண் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு, வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சையின் பின் உயிர் தப்பினார். அவரையும் அவரது கணவரையும் வைத்தியசாலையில் உள மருத்துவப் பிரிவில் என்னிடம் அனுப்பினார்கள் அவர்களுடன் பேசிப்பார்க்கும்படி.

கணவர் எனக்கு முன்னே வந்து அமர்ந்தார். மனைவியை நாற்காலியில் அமரச்சொன்ன போது அமராமல் சுவரோடு சாய்ந்து கொண்டே நின்றார். அவரிடம் நிலைமையை அறிந்து கொள்ள சில கேள்விகள் மெதுவாகக் கேட்டபோது அவர் ஒன்றுமே சொல்லாமல் மௌன மாகவே நின்றார்.

கணவரிடம் "உங்களுக்கு எத்தனை பிள்ளைகள்?" என்று கேட்டேன் "ஐந்து பிள்ளைகள்" என்றார் "அவர்களின் பெயர்கள் சொல்ல முடியுமா?" என்று கேட்டேன். அவர் தயங்கித் தயங்கி இரு பிள்ளைகளின் பெயர்களைச் சொல்லிவிட்டு மற்றவர்களின் பெயர்களை மறந்தவராக மனைவியின் முகத்தைப் பார்த்தார். மனைவி எந்த உணர்வு களையும் வெளிக்காட்டாமலே நின்றார்.

உங்கள் பிள்ளைகளின் பெயர்களையே மறந்து [illegible] உங்கள் மனைவி இந்த தற்கொலை முயற்சியில் இறந்திருந்தால் பிள்ளைகளை எப்படி வளர்த்திருப்பீர்கள் என்று குற்ற உணர்வு ஏற்படாத வகையில் மெல்லக் கேட்டேன்.

கணவர் தலை குனிந்திருந்தார். தான் அதிகம் குடிப்பதாகவும் மனைவியைக் கடுமையாகத் தினமும் அடிப்பதாகவும், துன்புறுத்துவதாகவும் ஒத்துக்கொண்டார். குடியை முற்றாக விட்டுவிட விரும்புவதாகவும் சொன்னார்.

ஒவ்வொரு வாரமும் உளமருத்துவப் பிரிவில் நடைபெறும் குடிப்பழக்கத்தை விடவிரும்புபவர்கள் பங்கு பற்றும் குழுச் சிகிச்சையில் (GROUP THERAPY) பங்குபற்றும்படி கேட்டுக் கொண்டேன்.

அவர் ஒவ்வொரு வாரமும் பங்கு பற்றினார். அவரது மனைவிக்கும் தகுந்த உளவளத்துணை அளிக்கப்பட்டது. குடிப்பழக்கத்தை உடன் விட்டதால் ஏற்பட்ட கைநடுக்கம் போன்ற ஒதுங்கல் அறிகுறிகளுக்கு மருந்து கொடுக்கப்பட்டது. காலப்போக்கில் அவர் குடியை மறந்து சாதாரண வாழ்வுக்குத் திரும்பினார்.

சென்ற நல்லூர் திருவிழாவில் அவர் குடும்பத்தோடு பங்கு பற்றி சனத்திரளோடு வெளிவருவதைக் கண்டேன். அவரும் அவரது மனைவியும் மிக மகிழ்ச்சியோடு என்னைக் கண்டு கதைத்து நன்றி சொல்லி சனத்திரளில் மீண்டும் கலந்தனர்.★

- இரா.சந்திரசேகர சர்மா M.A.

## மரணம்

ஜனனித்த ஒவ்வொரு
ஜீவனும்
கட்டாயம் எதுவுமின்றி
ஏற்றுக் கொள்ளும்
சன்மானம்.

உயிரினத்தின் வேண்டாத
விருந்தாளியாய்
நித்தமும் சிறைப்பிடிக்கும்
இராட்சதன்.

எத்தனை உயிர்கள்
அத்தனையும்
உன் வெறித்தனத்தால்
நண்டோடு அள்ளி
நூலோகம்
அனுப்பினாய்.

வேதனையில் வெந்துபோன
இதயங்களை
வெறியோடு தறித்து
வேரோடு
சாய்த்து விட்டாய்

எதுவும் நிச்சயமற்ற
இவ்வுலகில்
நீ மட்டும்
நிச்சயமா?????
ஓ..... மரணமே....
உனக்கு மரணமே
இல்லையா???

- ரேகா.

## நரகம்

நினைவுகளை
அழவிட்டுப் பார்த்தேன்
இதயம் நிர்வாணமாய்
தெரிந்தது----.

ஜே.எஸ்.ராஜ்,
யாழ்.பல்கலைக்கழகம்.

## காதல்

பார்வைகள்
பல்லவி
புன்னகைகள்
அநுபல்லவி
கண்ணீர்
சரணம்.

வெ.துஷ்யந்தன்,
அல்வாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைநகர் களபூமி, பாலாவோடை
குறிஞ்சாக்குளி

**ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில்**

விரோதி வருஷம்- 2009

**பிரம்மோற்சவ விஞ்ஞாபனம்**

**உற்சவ கால விவரம்**

வைகாசி மாதம் 13ஆம் நாள் (27.05.2009) புதன்கிழமை
மாலை 6 மணிக்கு சாந்திக்கிரியைகள்

வைகாசி மாதம் 14ஆம் நாள் (28.05.2009) வியாழக்கிழமை
காலை 6 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி
மு.ப.10 மணிக்கு கொடியேற்றம்

வைகாசி மாதம் 20ஆம் நாள் (03.06.2009) புதன்கிழமை
வேட்டைத்திருவிழா

வைகாசி மாதம் 21ஆம் நாள் (04.06.2009) வியாழக்கிழமை
சப்பறத்திருவிழா

வைகாசி மாதம் 22ஆம் நாள் (05.06.2009) வெள்ளிக்கிழமை
காலை 9 மணிக்கு இரதோற்சவம்
(தேர்த்திருவிழா)

வைகாசி மாதம் 23ஆம் நாள் (06.06.2009) சனிக்கிழமை
காலை 8 மணிக்கு தீர்த்தோற்சவம்

வைகாசி மாதம் 24ஆம் நாள் (07.06.2009) ஞாயிற்றுக்கிழமை
பூங்காவன உற்சவம்

வைகாசி மாதம் 26ஆம் நாள் (09.06.2009) செவ்வாய்க்கிழமை
காலை 8 மணிக்கு வேள்வியும்
வைரவர் பொங்கலும்

மகோற்சவ குரு:
சத்தியோயாத சிவாசாரியார்
பிரம்மஸ்ரீ கு.சண்முகராஜக் குருக்கள்
(ஆலயப் பிரதமகுரு).

(85580) **நிர்வாகம்.**


## சின்ன வெங்காயத்தின் விலை உயர்வடைந்தது

குடாநாட்டில் சின்ன வெங்காயத்தின் விலை திடீரென அதிகரித்துள்ளது. திருநெல் வேலி, சுன்னாகம்,மருதனார்மடம் போன்ற பிரதான சந்தைகளில் சின்ன வெங்காயம் கிலோ 60 ரூபா தொடக்கம் 70ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

குடாநாட்டில் இருந்து கடந்த வாரம் தென் பகுதிக்கு வெங்காயம் ஏற்றுமதி செய்யப்பட்டது. இந்த ஏற்றுமதியையடுத்து வெங்காயத்தின் விலை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (203 - 224)

## மினி 'கோப் சிற்றி' திறப்பு விழா

யாழ்ப்பாணம், மே 27

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளை- 5 பண்ணாகத்தில் அமைக்கப்பட்ட சிறிய கூட்டுறவு நகர் திறப்புவிழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மேற்படி சங்கத் தலைவர் ம.சிவசுப்பிரமணியம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம் கலந்து மேற்படி கூட்டுறவு நகரைத் திறந்து வைக்கவுள்ளார். (201)

## நெஞ்சை விட்டகலாத நினைவலைகள்

| 11ஆம் ஆண்டு | 4ஆம் ஆண்டு | 22ஆம் ஆண்டு |
|---|---|---|





| அமரர் முத்து பொன்னம்பலம் (இளைப்பாறிய அதிபர்) | | திருமதி இராசமணி பொன்னம்பலம் | | அமரர் அருளம்பலம் முத்துராசா (முன்னாள் உபதபால் அதிபர்- தொண்டைமானாறு) |
|---|---|---|---|---|
| 25.12.1914 | மண்ணில் | 23.07.1916 | மண்ணில் | 03.04.1930 |
| 02.01.1998 | விண்ணில் | 25.02.2005 | விண்ணில் | 27.05.1987 |

அன்பின் திருவுருவாய் பாசத்தின் உறைவிடமாய்
பண்புடன் பாரிலே எம்முடன் வாழ்ந்திட்ட நீவிர்
இவ்வுலக வாழ்வுதனை இன்முகத்துடன் நீத்தீர்களே
என்றும் உம் நினைவில் வாடும் நின் உறவுகள்.

"முத்து வாசா",
கெருடாவில், தொண்டைமானாறு. (சி/558717) குடும்பத்தினர்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

### அமரர் Dr. அருளம்பலம் பேரின்பநாதன்

(சிறுவர் பாதுகாப்பு நிதியக் கல்விப் பிரிவின் முன்னாள் முகாமையாளரும் யாழ். Solidar நிறுவனத் தலைவரும்)

அன்னை மடியில்: 21.09.1947

ஆண்டவன் இணைப்பில்: 27.04.2009



கடந்த (27.04.2009) அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு பல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும் யாழ்.போதனா வைத்தியசாலையில் நோயுற்றிருந்த வேளையில் அவருக்குச் சிகிச்சையளித்த வைத்தியர்கள், தாதிமார்கள், உதவியாளர்கள் அனைவருக்கும் தொலைபேசி மூலம், தந்தி மூலம், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் நேரடியாக வந்து ஆறுதல் கூறிய அனைத்து உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

இன்று (27.05.2009) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்).

கிரேஸ் வீதி,
உடுப்பிட்டி. (85374)

பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களுக்கான கிரிக்கெட் போட்டியில் பருத்தித்துறைப் பிரதேச அணி சம்பியன்

வலி. வடக்கு, மே 27

யாழ்.மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவு வடமாகாண விளையாட்டுத் திணைக் களத்தின் உதவியுடன் பிரதேச செயலகங் கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடத்திய பெண்களுக்கான மென்பந்துக் கிரிக்கெட் போட்டியில் பருத் தித்துறை பிரதேச செயலக அணி மாவட்டச் சம்பியனாகியது.

மல்லாகம் மகா வித்தியாலய மைதானத் தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் சங்கானை பிரதேச செயலக அணியும் பருத் தித்துறை பிரதேச செயலக அணியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய சங்கானை பிரதேச செயலக அணி 04 விக்கெட்டுக் களை இழந்து 53 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. நிருசா 15 ஓட்டங்களையும், பிறேமிலா 13 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டதுடன் உதிரிகளாக 12 ஓட்டங்க ளும் பெறப்பட்டன.

பருத்தித்துறைப் பிரதேச செயலகத் தைச் சேர்ந்த சுவிதா, ஜானகி, குகசாந்தினி ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட் டைக் கைப்பற்றினார்கள்.

54 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பருத்தித்துறை பிரதேச செயலக அணி ஒரு விக்கெட்டை இழந்து 55 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.

குகசாந்தினி 25 ஓட்டங்களையும் ஜனாகி 7 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்ட துடன் உதிரிகளாகப் 16 ஓட்டங்களும் பெறப்பட்டன.

சங்கானைப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த சிவதர்சினி ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார். (50-86)

## கபடி வீராங்கனைக்கு கை முறிந்தது

யாழ்ப்பாணம், மே 27

யாழ். மாவட்ட மட்டத்தில் இடம்பெற்ற பெண்களுக்கான கபடிப் போட்டியில் கலந்து கொண்ட வீராங்கனை ஒருவர் விளையாடும்போது தவறுதலாக வீழ்ந்த தால் அவரது கை முறிந்துள்ளது.

தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த வீராங்கனை ஒருவரே இவ்வாறு பாதிக்கப்பட்டவராவார்.

குறிப்பிட்ட வீராங்கனை யாழ்ப் பாணம் போதனா வைத்தியசாலைக்கு உடனடி யாகக் கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச் சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# வடமாகாணப் பூப்பந்தாட்டச் சம்பியனாக யாழ்.மாவட்ட ஆண், பெண் அணிகள் தெரிவு

வலி. வடக்கு, மே 27

வடமாகாணப் பூப்பந்தாட்டச் சம்பிய னாக யாழ்.மாவட்ட பூப்பந்தாட்ட ஆண், பெண் அணிகள் தெரிவாகியுள்ளன.

திருகோணமலை மக்கெய்சர் உள்ளக விளையாட்டு மைதானத்தில் இப்போட்டி கள் நடைபெற்றன.

ஆண்களுக்கான இறுதிப் போட்டியில் யாழ்.மாவட்டப் பூப்பந்தாட்ட அணியும் வவுனியா மாவட்டப் பூப்பந்தாட்ட அணி யும் மோதிக் கொண்டன. இதில் யாழ். மாவட்ட அணி வெற்றி பெற்று மாகாணச் சம்பியனாகியது.

பெண்களுக்கான இறுதிப் போட்டியிலும் வவுனியா மாவட்டப் பூப்பந்தாட்ட அணி யும் யாழ்.மர்வட்டப் பூப்பந்தாட்ட அணியும் மோதிக் கொண்டதில் யாழ்.மாவட்ட அணி வெற்றிபெற்று மாகாணச் சம்பியனாகியது.

இந்த இரண்டு அணிகளும் தேசிய மட்டப் போட்டிகளில் விளையாடத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (50-86)

# பெண்களுக்கான மேசைப்பந்தாட்டத்தில் வெற்றிவாகை சூடியது யாழ்.மாவட்ட அணி

வலி. வடக்கு, மே 27

வடமாகாண மட்டத்தில் இடம்பெற்ற மேசைப்பந்தாட்டப் போட்டியில் யாழ். மாவட்ட பெண்கள் அணியினர் சம்பியனா கியுள்ளனர்.

திருகோணமலை சென். ஜோசவ் வித்தி யாலயத்தில் இடம்பெற்ற இறுதிப்போட் டியில் மன்னார் மாவட்ட அணியினரும் யாழ்.மாவட்ட அணியினரும் மோதிக் கொண்டனர்.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் ஆட்ட நிறைவில் யாழ். மாவட்ட அணியினர் மன்னார் மாவட்ட அணியினரை வெற்றிகொண்டு மாகாணச் சம்பியனாகத் தெரிவாகினர்.

இந்த வெற்றியின் மூலம் தேசிய மட் டத்தில் நடைபெறும் போட்டிகளில் விளை யாட யாழ். மாவட்ட அணி தகுதி பெற்றுள் ளமை குறிப்பிடத்தக்கதாகும். (04 - 86)



வலி.வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலரின் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டி அண்மையில் இடம்பெற்றது. போட்டி ஒன்றில் வெற்றியீட்டிய வீராங்கனைகளுக்கு உடுவில் பிரதேச செயலக விளையாட்டு அலுவலர் செல்வி.சி.மனோன்மணி சான்றிதழ் வழங்[...]தைப் படத்தி[...]ணலாம். ([...]: தேசன்)

## அல்வாயில் 20/20 மென்பந்தாட்டம்

வடமராட்சி, மே 27

அல்வாய், மாலி சந்தி மைக்கேல் விளை யாட்டுக்கழகம் ருவென்ரி /20 மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஒன்றை விரை வில் நடத்தவுள்ளது.

இப்போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த பதிவு செய்யப்பட்ட விளையாட் டுக் கழகங்கள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் சமுகச் செயலாளருடன் தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (1-236)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

### மென்பந்துக் கிரிக்கெட்

யாழ்ப்பாணம், மே 27

யாழ்.மத்திய கல்லூரியின் மறைந்த முன்னாள் மாணவ முதல்வர் அமரர் பொன். விபுலானந்தனின் ஞாபகார்த்தமாகக் கல்லூரி மாணவ முதல்வர் சபையினால் நடத்தப் படும் மென்பந்துச் சுற்றுப்போட்டி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற வுள்ளது.

இதில் பங்குபற்ற விரும்பும் அணிகள் கல்லூரி மாணவ முதல்வர் சபையிடம் விண் ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள் ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை வியாழக்கிழமை வரை விண்ணப் பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் எனத் தெரி விக்கப்பட்டுள்ளது. (50)

### போட்டி நிரல் தயாரிப்பும் கலந்துரையாடலும்

யாழ்ப்பாணம், மே 27

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத் தினால் யாழ்.மாவட்டப் பாடசாலைக ளுக்கிடையே நடத்தப்பட்டுவரும் உதை பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் பங்குபற் றும் 15(1995/1996), 19(1991/1992) வயதுப் பிரிவுக்குட்பட்ட அணி பொறுப் பாசிரியர் கலந்துரையாடலும், போட்டி நிரல் தயாரிப்பும் நாளை வியாழக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு சென்.பற்றிக்ஸ் கல் லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன. (50)

# யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான பெண்களுக்கான தடகளப் போட்டி முடிவுகள்

வலி. வடக்கு, மே 27

யாழ்.மாவட்டப் பாடசாலை அணிக ளுக்கு இடையே நடைபெற்ற 21 வயதுப் பிரிவுப் பெண்களுக்கான தடகளப் போட் டிகளின் முடிவுகள் வருமாறு:-

**100 மீற்றர் ஓட்டம்**

மு.கசேந்தினி(வரணி மகா வித்தியா லயம்), இ.கௌதமி(மருதனார்மடம் இராம நாதன் கல்லூரி), சி.சரண்யா(வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம்).

**200 மீற்றர் ஓட்டம்**

த.பிரதீபா(தெல்லிப்பழை யூனியன் கல்லூரி), மு.கசேந்தினி(வரணி மகா வித் தியாலயம்), சி.சரண்யா(வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம்).

**400 மீற்றர் ஓட்டம்**

த.பிரதீபா(தெல்லிப்பழை யூனியன் கல்லூரி), பா.பிரவீனா(வசாவிளான் மத் திய மகா வித்தியாலயம்), அ.ஜெயதர்சினி (யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலை).

**800 மீற்றர் ஓட்டம்**

ந.மேரி(மானிப்பாய் மகளிர் கல்லூரி), செ.திருமகள்(தெல்லிப்பழை யூனியன் கல்லூரி), ஜெ.பூரணி(வடமெதடிஸ் பெண் கள் உயர்தரப் பாடசாலை).

**1500 மீற்றர் ஓட்டம்**

ந.மேரி(மானிப்பாய் மகளிர் கல்லூரி), ஜெ.பூரணி(வட.மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலை), பொ.கிருஷ்ணா (கச்சாய் அ.த.க.பாடசாலை).

**5000 மீற்றர் ஓட்டம்**

ந.மேரி(மானிப்பாய் மகளிர் கல்லூரி), சி.ஜசிந்தா(நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி), பொ.கிருஷ்ணா(கச்சாய் அ.த. க.பீடசாலை).

**110 மீற்றர் தடை தாண்டல் ஓட்டம்**

கீ.கீர்த்திகா(மருதனார்மடம் இராம நாதன் கல்லூரி), க.கீர்த்தனா(மல்லாகம் மகா வித்தியாலயம்), அ.தர்சனா(கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி).

**400 மீற்றர் தடை தாண்டல் ஓட்டம்**

கீ.கீர்த்திகா(மருதனார் மடம் இராம நாதன் கல்லூரி), த.பிரதீபா (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி), பா.ராஜசோபனா (யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலை).

**நீளம் பாய்தல்**

சி.கவிபிரியா(நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்), க.கீர்த்தனா(மல்லாகம் மகா வித்தியாலயம்), ஸ்ரீ.துஷ்யந்தி (பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி),

**உயரம் பாய்தல்**

செ.கீர்த்திகா(தெல்லிப்பழை மகா ஜனாக் கல்லூரி), ர.தானுகா(யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலை), சோ.ரேகா(வேலணை மத்திய கல்லூரி).

**முப்பாய்ச்சல்**

கீ.கீர்த்திகா(மருதனார்மடம் இராமநா தன் கல்லூரி), க.கீர்த்தனா(மல்லாகம் மகா வித்தியாலயம்), த.பிரதீபா(வட.மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலை).

**குண்டு எறிதல்**

செ.கீர்த்திகா(தெல்லிப்பழை மகா ஜனாக் கல்லூரி), ச.தர்சிகா (தெல்லிப் பழை மகாஜனாக் கல்லூரி), ம.வினோஜா (தென் மராட்சி சந்திரபுரம் ஸ்கந்தா வித்தி யாலயம்),

**தட்டெறிதல்**

செ.கீர்த்திகா(தெல்லிப்பழை மகாஜ னாக் கல்லூரி), ச.ஸ்ரீசக்தி(வட்டு.யாழ்ப் பாணக் கல்லூரி), வி.ஜனனி (வட.மெத டிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலை).

**கோலூன்றிப் பாய்தல்**

ஜெ.நிருஷா(அளவெட்டி அருணோத யாக் கல்லூரி).

**ஈட்டி எறிதல்**

ப.கௌதமி(தெல்லிப்பழை மகாஜ னாக் கல்லூரி), ம.வினோஜா (சந்திரபுரம் ஸ்கந்தா வித்தி), அ.மேரி சிந்துரா(புங்குடு தீவு மகா வித்தியாலயம்).

**4X100 மீற்றர் அஞ்சலோட்டம்**

மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி, யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலை, வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம்.


**4X400 மீற்றர் அஞ்சலோட்டம்**

வசாவிளான் மத்திய மகா வித்தியா லயம், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலை. (தொடரும்) (50-86)



யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடை[illegible]களில் முதலாம் இடத்தைப் பெற்ற ஊர்காவற்றுறை அந்தோனியார் கல்லூரி உடற்பயிற்சி அணி, இரண்டாம் இடத்தைப் [illegible] இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி உடற்பயிற்சி அணி ஆகியவற்றைப் படங்களில் காணலாம். (படங்கள்:-தேசன்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




வன்னி மக்கள் துயர் துடைப்புச் செயற்பாட்டுக் குழு வன்னி மக்களுக்கு உதவுவதற்கு மேற்கொண்ட நடவடிக்கையை அடுத்து யாழ். கூட்டுறவுச் சங்கம், யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் ஆகியன 3 லட்சம் ரூபா பணமாகவும் 7 லட்சம் ரூபா பெறுமதியான பிஸ்கட் வகைகளையும் வழங்கியுள்ளன.

இந்த பிஸ்கட் வகைகளை வன்னி மக்கள் துயர் துடைப்புச் செயற்பாட்டுக் குழுவின் உபதலைவர் க.தேவேந்திரன், செயற்பாட்டுக் குழுவின் ஊடக இணைப்பாளர் இ.சதீஸ் ஆகியோரிடம் யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசப் பொதுமுகாமையாளர் எஸ்.பஞ்சாட்சரம் கையளிப்பதை முதலாவது படத்தில் காணலாம்.

செயற்பாட்டுக் குழுவின் காப்பாளர் ஐ.ரங்கேஸ்வரன், ஊடக இணைப்பாளர் இ.சதீஸ் ஆகியோர் நெல்லியடி ம.ம.வியில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களின் குறைகளைக் கேட்டறிவதை இரண்டாவது படத்தில் காணலாம்.

## வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஊழியர் நலன்புரிச் சங்கம்

01.05.2009இல் நடத்த இருந்த அதிஷ்டலாபச் சீட்டிழுப்பானது 25.05.2009 இல் நடத்தப்பட்டது.

**வெற்றி இலக்கங்கள் முறையே**

1ஆம் பரிசு இல: 458

2ஆம் பரிசு இல: 4091, 3ஆம் பரிசு இல: 2797.

**பத்து ஆறுதல் பரிசு இலக்கங்கள்**

1372, 2918, 3449, 3287, 1840, 555, 191, 548, 4616, 3685.

வெற்றியாளர்கள் அதிஷ்ட சிட்டையுடன் 10.06.2009 பிற்பகல் 2 மணியளவில் நிறைவேற்றுப் பொறியியலாளர் காரியாலயம், இல.657, கடற்கரை வீதி,யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் வந்து பரிசில்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**தலைவர்**, ஊழியர் நலன்புரிச் சங்கம்,
வீதி அபிவிருத்தி அதிகார சபை, யாழ்ப்பாணம்.

(85599)

## விற்பனைக்கு

உரும்பிராய், 50 இல் பலாலி றோட்டில், கற்பகப் பிள்ளையார் கோயிலுக்கும் உரும்பிராய் சந்திக்கும் இடையில் அமைந்துள்ள 2½ பரப்பு காணிகிணற்றுடன்கல்வீடுவிற்பனைக்கு உண்டு.

நேரில் தொடர்பு கொள்ளவும்.
தொ.பே.: 0777 551431 (சி/558723)

## ஒத்துமாறல்

திருகோணமலை வடக்கு மாகாண சபையில் கடமையாற்றும் முகாமைத்துவ உதவியாளர் யாழ்ப்பாணத்திற்கு ஒத்துமாற விரும்புகின்றார். ஆர்வமுள்ளோர் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 0712 159505

(86688)

## கண்ணீர் அஞ்சலி

எமது துறையில் சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தராக கடமையாற்றும் திரு.செ.மகேந்திரன் அவர்களின் அன்பு மனைவி

**திருமதி தவமணிதேவி மகேந்திரன்**

(நூலகர், யாழ்.மாநகர சபை)

அவர்கள் 24.05.2009 அன்று இறைபதம் அடைந்து விட்டார். அன்னாரின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு,அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

உடற் கூற்றுத் துறையினர், மருத்துவ பீடம்,
யாழ்.பல்கலைக் கழகம்.

(85600)


## நாளை மறுதினம் 29-05-2009 முதல்

உங்கள் அபிமான

பயிற்சி உதயன் உயர்ச்சி

கல்விச்சுடர் வழங்கும்

**தரம் 04 மாணவர்களுக்கான விசேட புலமைப்பரிசில் வெளியீடு**

**(தரம் 5 மாணவர்களுக்கும் பயன்மிக்கது)**

தரம் 04 இல் கல்வி கற்கும் மாணவர்களை 2010 இல் நடைபெறவுள்ள புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தயார்ப்படுத்துவதற்காக ஆரம்பப் படிநிலையிலிருந்து பாடத்திட்டத்துக்கு அமைவாக வெளிவரும் சிங்கள வெளியீடுகள்

**பிரபல ஆசிரியர்**

**இஸ்மாயில் எம். பைரூஸ் [கொழும்பு]**

அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டு தயாரிக்கப்படும் மாதிரி வினாத்தாள்கள்

**வெள்ளி தோறும்**

உங்கள் அபிமான கல்வீச் சுடரில் வெளிவரவுள்ளது.

பிரபல சிங்கள ஆசியர்களாலும், வெளியீட்டாளர்களாலும் தயாரிக்கப்பட்டு சிங்கள மொழியில் வெளியிடப்பட்டு வரும் ஸத்தர, லக்விது, ஜகத்தா, மிஹிர, ஷிஷ்யத்வ ஆகிய வினாத்தாள்களை மொழிபெயர்ப்புச் செய்து மேலதிக சேர்க்கைகளுடன் வெளிவரவுள்ளன.

**பிரபல சிங்கள வினாத்தாள்களை பயிற்சி செய்து பழக தமிழ் பேசும் மாணவர்களுக்காக கல்விச்சுடர் வழங்கும் அரிய வாய்ப்பு.**

உங்கள் பிரதிகளுக்கு அருகில் உள்ள உதயன் முகவரிடம் இன்றே முற்பதிவு செய்யவும்.
மேலதிக தொடர்புகளுக்கு:
071 4273035 / 071 6850005


## கருத்தரங்கு

மனிப்பாய்,
மே 27

14 வகையான நோய்களுக்கான சிகிச்சை முறைகளும்- கருத்தரங்கும் மானிப்பாய் அக்குபஞ்சர் வைத்தியசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

அக்குபஞ்சர் டாக்டர் ரி.சிறிஸ்கந்தராசா தலைமையில் இரு நாள்கள் இடம்பெற்றன.

மானிப்பாய் சத்தியசாயி சேவா நிலைய மனித மேம்பாட்டு கல்வி நிலைய பொறுப்பாளர் பசுமைப்புரட்சியாளர் வை.செகராஜசிங்கம் இதற்கான ஏற்பாட்டை மேற்கொண்டிருந்தார்.

இரு நாள் செயலமர்வும் 140 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

அத்துடன் வைத்திய சிகிச்சைக்கான குறிப்புகளும் வழங்கப்பட்டன.

(203-95)

## கண்காட்சி

யாழ்ப்பாணம்,
மே 27

'கோல்ட் ஒன்' சிறுவர் கழகம் நடத்தும் வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைக்கிடையேயான சித்திரக் கைவேலைக் கண்காட்சி எதிர்வரும் சனிக் கிழமை பருத்தித்துறை வட இந்துக் கல்லூரி யில் நடைபெறவுள்ளது.

(201)

## 16ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



**திருமதி சற்குணம் நடராசா**

கடந்த 12.05.2009 செவ்வாய்க்கிழமை இயற்கையெய்திய எமது குடும்ப விளக்கின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (28.05.2009) வியாழக்கிழமை காலை வில்லூன்றித் தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நண்பகல் 12 மணிக்கு எமது இல்லத்திலும் இடம்பெறும்.

நாளை மறுதினம் (29.05.2009) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் தொடர்ந்து மதியபோசன நிகழ்வும் நடைபெறும். இந் நிகழ்வுகளில் உற்றார், உறவினர் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*'அறிவகம்', பூதவராயர் வீதி,*
*திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.*
*தொ.பே.: 222 6808* (85602) **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

**நாகரட்ணம் தர்மரட்ணம்**

(ஓய்வுபெற்ற தபால் உத்தியோகத்தர், உரும்பிராய்)

உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட நாகரட்ணம் தர்மரட்ணம் (25.05.2009) திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகரட்ணம்(ஓய்வுபெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்)- மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா-நாகம்மா(ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர்- ஆசிரியை) தம்பதியரின் அன்பு மருமகனும், யோகமணியின் அன்புக் கணவரும், செல்வரட்ணம்(ஜேர்மனி), சண்முகரட்ணம்(கொழும்பு), இராஜேஸ்வரி(கொழும்பு), பாலசரஸ்வதி(கொழும்பு), யோகரட்ணம் (U.K), பாலரட்ணம் (U.K) ஆகியோரின் அன்புச் சகோதரரும், உருத்திரவிலாசினி, சத்தியேஸ்வரி, சாமுவேல் எபநேசர்(றோஜ்), இராஜேந்திரநாதன், பத்மினி, உதயராணி, தவமணி, இராஜேஸ்வரன், மனோன்மணி, கந்தையா, ஜெயமணி சற்குணபாலன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (27.05.2009), புதன் கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொழும்பு மாதம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(85601)

NO. 426/11, 2/11,
Cyril Perera Mavaththai, Colombo-13.
பிரதேச செயலக ஒழுங்கை,
கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.
-தொ.பே: 077 9900659, 0776956179

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










குடாநாட்டின் வர்த்தக தொழில் அபிவிருத்தி குறித்து ஆராய நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட கொழும்பு வர்த்தக சம்மேளனங்களின் பிரதிநிதிளுடன் யாழ். வணிகர் கழகத்தின் பிரதிநிதிகள் கழக அலுவலகத்தில் நேற்று பிற்பகல் கலந்துரையாடிய போது எடுக்கப்பட்ட படங்கள்.
(படங்கள்:லக்ஸ்மன்)

# குடாநாட்டின் வர்த்தக, தொழில் அபிவிருத்தி குறித்து கொழும்பில் இருந்துவந்த சம்மேளனப் பிரதிநிதிகள் ஆராய்வு

நல்லூர், மே 27

குடாநாட்டின் வர்த்தக தொழில் அபிவிருத்தி தொடர்பாக ஆராயும் பொருட்டு கொழும்பில் இருந்து வர்த்தக சம்மேளனங் களின் பிரதிநிதிகள் நேற்று யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

இலங்கை வர்த்தக சங்கம், இலங்கை வர்த்த கைத்தொழில் மன்றம், தேசிய வர்த்த சங்கம், சர்வதேச வர்த்தகர் சங்கம், இலங்கை வர்த்தக சங்கங்களின் சம்மேளனம் ஆகியவற்றின் பிரதிநிதிகளே நேற்று யாழ்ப்பாணம் விஜயம் செய்தவர்களாவர்.

அவர்கள் யாழ். வணிகர் கழக பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினர். இக்கலந்துரையாடலுக்கு யாழ். வணிகர் கழக உபதலைவர் ஆர்.ஜெயசேகரம் தலைமை வகித்தார்.

கலந்துரையாடலின் போது நான்கு விடயங்கள் ஆராயப்பட்டன.

* யாழ்ப்பாணத்துக்கான தரைவழிப் பாதை ஏ-9 திறப்பு, மின்சாரத் தடை.
* குடாநாட்டில் வர்த்தக நடவடிக்கைகளை விரிவு படுத்தல்.
* குடாநாட்டு உற்பத்திகளை தென்னிலங்கைக்கு அனுப்புதல்.

குடாநாட்டிற்கான தரை வழிப்பாதை திறப்பது குறித்து தாம் அரச உயர் மட்டத்துடன் கலந்துரையாடி ஆவன செய்வதாக கொழும்பில் இருந்து வந்த வர்த்தகர்கள் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

குடாநாட்டு உற்பத்திகளை தென்னிலங்கைக்கு எடுத்துச் செல்லும் பட்சத்தில் தென்னிலங்கையில் பொருள்களின் விலை குறைவடையும் என யாழ்.வணிகர் கழக பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

யாழ்.குடாநாட்டில் மீன் பிடியை அபிவிருத்தி செய்வது தொடர்பாகவும் நேற்றைய கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களை தென்பகுதிக்கு எடுத்துச் செல்வதற்கான வழி வகைகள் தொடர்பாக அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டு இந்தப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு துரிதமாக நடவடிக்கைகள் எடுக்கவுள்ளதாக தென்னிலங்கையிலிருந்து வந்த வர்த்தகப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

தென்பகுதியில் இருந்த சர்வதேச வர்த்தக சம்மேளனத்தின் பிரதிநிதி திஸ்ஸ ஜெயவீர தலைமையில் இலங்கை வர்த்தக சம்மேளனத்தைச் சேர்ந்த ஹரன் மல்வத்த, சுலந்த ஜெயசூரிய தேசிய வர்த்தக சம்மேளனத்தைச் சேர்ந்த திஸ்ஸ ரூபன், வர்த்தக கைத்தொழில் சமாசத்தைச் சேர்ந்த அஜித் வித்துஹேவா ஆகியோர் மற்றும் யாழ்.வணிகர் கழக பிரதிநிதிகளும் நேற்றைய கலந்துரையாடலில் பங்குபற்றினர். (அ-111-121)

## தென்மராட்சியில் நாளை ஒருங்கிணைப்புக் கூட்டம்

யாழ்ப்பாணம், மே 27

தென்மராட்சிப் பிரதேச விவசாய குழு மற்றும் ஒருங்கிணைப்புக் குழு ஆகியவற்றின் கூட்டம் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறுமென பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார். (1-207)

## திறந்த பல்கலைக்கழக சிங்கள மொழிப் பரீட்சை

யாழ்ப்பாணம், மே 27

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் நடைபெற்றுவரும் சிங்கள மொழி (அடிப்படை, ஆரம்ப) கற்கை நெறிக்கான இறுதிப் பரீட்சை எதிர்வரும் சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் பிராந்திய நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தப் பரீட்சைக்கு தோற்ற அனுமதி பெற்றவர்கள் தமது விவரங்களை பிராந்திய நிலையத்தில் பார்வையிடலாம் என இணைப்பாளர் தெரிவித்தார். (1)

## கல்வியியற் கல்லூரியில் புதிய மாணவர்கள் அனுமதி இன்று

யாழ்ப்பாணம், மே 27

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரிக்கு 2009 ஆம் கல்வியாண்டுக்கு புதிய ஆசிரிய மாணவர்களை சேர்த்துக்கொள்ளும் நிகழ்வு இன்று காலை முதல் கல்லூரியில் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களை சமுகமளிக்குமாறு பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் கேட்டுள்ளார். (1)

# தேசிய பாடசாலைகளில் ஆசிரியர்களாக நியமனம் பெறும் 83 பட்டதாரிகள்

## ஜனாதிபதி மாளிகையில் கடிதங்கள் திங்களன்று கையளிப்பு

யாழ்ப்பாணம்,மே 27

தேசிய பாடசாலைகளுக்கு பட்டதாரிகளை ஆசிரியர்களாக நியமிக்கும் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 83 பேருக்கு எதிர்வரும் முதலாம் திகதி நியமனம் வழங்கப்படவிருக்கிறது.

ஜனாதிபதி செயலகத்தில் வைத்து இந்த நியமனக் கடிதங்கள் வழங்கப்படவுள்ளன.

நியமனம் பெறுவோரின் விவரம் வருமாறு:-

ரி.அஜேந்திரன்- அளவெட்டி கிழக்கு, ரி.அமலதாஸ்-தாவடி, ஐ.அமல்ராஜ்-புலோலி தெற்கு, எல்.சி.ஆனந்-உயரப்புலம், எஸ்.ஆனந்தகுமார்- கல்வயல், கே.பாலசண்முகன்-கொக்குவில் கிழக்கு,பி.பாஸ்கர்- கரணவாய் தெற்கு, பி.பொபிதா- வல்வெட்டி, எஸ்.பமிலா-கந்தஉடையார் வீதி, பருத்தித்துறை, எவ்.காயத்திரி- அச்சுவேலி, ஜி.ஞானப்பிரகாசன்- கொம்மாந்துறை, வி.குணநாத சம்பந்தன்- நெல்லியடி, கரவெட்டி, ஆர்.இளங்குமரன்- புலோலி தெற்கு,ஆர்.இராதிகா-கொடிகாமம், எம்.யமுனா-சுன்னாகம், ஜே.ஜெயநேசன்-கற்சிலை மடு ,ரி.ஜீவரட்ணம்- மானிப்பாய், ஜெ.ஜெனித்தா-பாஷையூர், எம்.ஜெயசுதன்-வரணி, ஜெ.ஜெயப்பிரி யன்-இணுவில் வடக்கு, என்.ஜெயரூபன்- தும்பளை, பி.கஜகரன் -நீர்வேலி மேற்கு, ரி.லின்ரஸ்- கோவில் வீதி, யாழ்ப்பாணம், ஜெ.மனோஜா- இமையாணன் வடக்கு, ஆர்.மேகலா- அரியாலை மேற்கு, எஸ். முகுந்தன்- அச்சுவேலி, ஆர்.நஜன்- கொக்குவில், என்.நவஜீவன்-மானிப்பாய், சி.நேதாஜி- சாவகச்சேரி ,எஸ்.பிரபாகரன்- சுதுமலை வடக்கு, ஜி.பிரதீபா காயத்திரி- கொக்குவில்,எஸ்.புவனகுமாரி- தேவகோட்டம், உடுப்பிட்டி, ஆர்.ராஜகோபால்- சங்கானை, இ.பி.ராஜநா தன்-இளவாலை,ரி.றஜீதன்-எழுதுமட்டு வாள் தெற்கு,ஆர்.ரமணன்-கோப்பாய், எல்.எஸ்.ரதி-இளவாலை, ரி.ரவிச்சந் திரன்-மானிப்பாய், எஸ்.சந்திரசேகர்- கொக்குவில், எஸ்.சசிக்குமார்- ஏழாலை, பி.சயந்திகா- நல்லூர், பி.சேயோன்- சுன்னாகம், எ.எஸ்.செரின் சர்மிலா- அம்பலவாணர் வீதி உடுவில்,எஸ்.சிவஞானவதி-புத்தூர், இ.சிவாஜினி- பண்ணாகம் தெற்கு, வி.சிவாந்தினி- சிவலிங்கப்புளியடி, ஆர்.சிறிமயூரதி-திருநெல்வேலி வடக்கு, எஸ்.சுகன்யா- வியாபாரி மூலை, கே.சுரேஸ்குமார்- குப்பிளான், எஸ்.தர்மதாசன்- உடுவில் தெற்கு, பி.உஷாந்தினி-மூளாய் தெற்கு,ஜி.உதயசீலன்-அல்வாய் வடக்கு, என்.வாகீசன்-யாழ்ப்பாணம் (751441860v), ஆர்.வாகீசன்- கோப்பாய் வடக்கு,கே.வசந்தமாறன்-பிறவுண் வீதி, யாழ்ப்பாணம், ஆர்.வாசுகி-கொம்மாந்துறை, வல்வெட்டித்துறை,ரி.யசோதரன்-உடுவில் தெற்கு, கே.யோகேந்ராஜ்-தாவடி தெற்கு-

ஜி.வி.பாலராஜ்-114,மெயின் வீதி, யாழ்., ஐ.இலங்கேஸ்வரன்- நவாலி தெற்கு, ஆர்.ஜெயகாந்தன்- கரம்பொன் கிழக்கு,எம். ஜெயந்தன்- புத்தூர், ரி.சி. ஜோன் கமின்ரீன்- நாவாந்துறை, எஸ். கிருஸ்ணகுமார்- குப்பிளான், ஜி.மதனா-கே.கே.எஸ்.வீதி,யாழ், வி.மதியழகன்-திருநாவற்குளம், யாழ்ப்பாணம், என்.நளாஜினி- சித்தாண்டி, எ.நித்லவர்ணன்-பொலிகண்டி கிழக்கு, ரி.பிரதீபன்- கந்த உடையார் லேன்(780464100v), ரி.ராஜேந்திரகுமார்- மானிப்பாய், என்.ராமேஸ்வரன்- சுழிபுரம், கே.சுதாகரன்-பிறவுண் றோட்,யாழ்ப்பாணம்,இ.சுதாராஜ்-குப்பிளான் வடக்கு, கே.சுதர்சன்- சித்தங்கேணி, பி. உதயகுமார்- யாழ்ப்பாணம் (832864005v), வி.உதேஷ்-நாவற்குழி ,எ. வைகுந்தன்-அல்வாய் கிழக்கு,எஸ்.வினோதினி-கரணவாய் மத்தி, ஐ.உதயன்-அராலி மத்தி, கே.பி.சிவனேசன்-கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்,என்.செல்வகுமாரன்-பருத்தித்துறை, எம்.மணிவண்ணன்-ஏழாலை, ரி.முகுந்தன்- திருநெல்வேலி.

# கூட்டுறவுச் சங்கங்கள் பணம் செலுத்தாத போதிலும் கோதுமை மா, சீனியை எடுத்துவர நடவடிக்கை

## அரச அதிபர் விளக்கம்

யாழ்ப்பாணம், மே 27

ப.நோ.கூ.சங்கங்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட பொள்களுக்கான பணம் செலுத்தப்படாத போதும் மாவட்டத்தின் உணவுத்தேவையைக் கருத்தில் கொண்டு கோதுமை மா மற்றும் சீனியை கப்பலில் எடுத்துவந்து விநியோகிக்க உள்ளோம்.

யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நீண்ட அறிக்கை ஒன்றை அரச அதிபர் நேற்று விடுத்துள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு:-

அத்தியாவசிய சேவைகள் நாயகத்தால் 2006 ஒகஸ்ட் மாதம் தொடக்கம் கப்பலில் அனுப்பப்பட்ட அரிசி, சீனி, கோதுமை மா, பருப்பு உட்பட்ட சகல பொருள்களும் ப.நோ.கூ. சங்கங்களுக்கு கடன் அடிப்படையிலேயே வழங்கப்பட்டன அந்தப் பொருள் விநியோகத்தில் செயலகத்திற்கு இன்னமும் 177 மில்லியன் ரூபாவை சங்கங்கள் செலுத்தவேண்டியுள்ளது.

இப் பணம் ப.நோ.கூ. சங்கங்களினால் மாவட்ட செயலகத்துக்கு செலுத்தப்பட்டால் அன்றி தொடர்ந்தும் அரிசி, சீனி, கோதுமை மா, பருப்பு போன்ற அத்தியாவசியப் பொருள்களை சங்கங்களுக்கு விநியோகிக்க முடியாதநிலைமை தோற்றுவிக்கப்படுகின்றது.

அத்தியாவசிய சேவைக்ள் ஆணையாளர் நாயகத்திற்குரிய பணம் செலுத்தப்படாத போதிலும் மாவட்டத்தின் உணவுத் தேவையை கருத்தில் கொண்டு உடனடியாக 750 மெற்றிக்தொன் சீனியையும், 1,000 மெற்றிக் தொன் கோதுமை மாவையும் இங்கு எடுத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கோதுமை மா ஏற்றிக்கொண்டு திருகோணமலையில் இருந்து கப்பல் திங்கட்கிழமை புறப்பட்டுள்ளது. அதே போன்று 750 மெற்றிக் தொன் சீனியையும் கொழும்பில் வைத்து கப்பலில் ஏற்றப்படுகின்றது என்றுள்ளது.

(அரச அதிபரின் விரிவான அறிக்கை பின்னர் வெளிவரும்) (அ-1)

## யாழ். தேசிய கல்வி...

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிரோஜினி ஞாசோதி (சங்கானை), சிவராஜா விக்னகுமரன் (கோப்பாய்), மனோகரன் சந்துரு (உரும்பிராய்), சிந்துஜா தேவபாலன் (யாழ்ப்பாணம்), பிரியசாலினி யோகேஸ்வரன் (சண்டிலிப்பாய்), உசாலினி நவரட்ணம் (மானிப்பாய்), சோபனா சண்முகலிங்கம் (மீசாலை), வினோதீபா விநாயகமூர்த்தி (இணுவில் கிழக்கு), துசாந்தி சிவகணபதி (யாழ்ப்பாணம்) ,, அனோஜா ஜெகநாதன் (யாழ்ப்பாணம்), சிவசுப்பிரமணியதேவா நீலா (புலோலி), சிவலோகநாதன் சிவசங்கர் (நீர்வேலி), சுஜிதா ராஜாபுவனேந்திரன் (சுன்னாகம்), வசந்துசாந் வசந்தகுமார் (கொக்குவில்), சிவரூபினி குணசேகரம் (நீர்வேலி), மிதுலை உதயநாதன் (நல்லூர்) ,மயூரினி செல்வராஜா (மானிப்பாய்) , பிரதீபா செல்வச்சந்திரன் (பருத்தித்துறை) , அமுதினி நடேசன் (வரணி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பல்கலைக்கழகத்தில் கல்வி டிப்ளோமாக் கற்கைநெறிக்கு தெரிவானோர் 29 ஆம் திகதிக்கு முன்னர் பதியவேண்டும்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஈராண்டு பகுதிநேர (2007/2009), முழுநேர (2007/2008) பட்டப்பின் கல்வி டிப்ளோமாக் கற்கைநெறிக்குத் தெரிவுசெய்யப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

மேற்படி கற்கைநெறிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டோர் இம் மாதம் 29ஆம் திக திக்கு முன்னர் தமது பதிவுகளை மேற் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இக்கற்கை நெறிகள் ஜூன் மாதம் 13ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் என பல்கலைக்கழக பதிவாளர் தெரிவித்துள்ளார்.

**பகுதிநேரம் - 2007/2009**

திருமதி எம்.அகல்யா, செல்வி ஏ.அங்கயற்கண்ணி, திருமதி கே.அனுஷியா, செல்வி கே.பகீரதிதேவி, திருமதி எஸ். பாமிலா, திருமதி பி.மதிவதனி, கே.சந்திர மௌலீசன், செல்வி பி.தேவகி, ஏ.எட்வின் சுமந்திரனன், கே.கஜேந்திரன், திருமதி எஸ். கீதாஞ்சலி, எஸ்.ஞானச்செல்வன், எஸ்.ஞானமுரளி, கே.ஞானராஜா, கே.ஜதீசன், திருமதி ஜி.ஜெயபாரதி, செல்வி ரி.ஜெயபாரதி, எஸ்.ஜெயச்சந்திரன், திருமதி பி.கஜலஷ்மி, திருமதி எம். கஜேந்தினி -

திருமதி என்.கமலினி, செல்வி சி.கவிதா, திருமதி பி.கவிதா, எஸ்.கேசவன், செல்வி எஸ்.கிருஷ்ணவதனி, கே.கிருபாகரன், என்.கிருஷ்ணகுமார், ரி.கிருஷ்ணதாஸ், திருமதி ஜெ.மலர்விழி, செல்வி எஸ்.மஞ்சுளா, செல்வி எஸ். மீனா, ரி.மோகன், எஸ்.முகுந்தன், ரி.முரளிதரன், திருமதி கே.நளிந்தினி, எஸ்.நந்தகுமார்.

திருமதி பி.நருமதா, எம்.பரமேஸ்வரன், பி.பரணிதரன், செல்வி எஸ்.பரிமளா, திரு மதி கே.பத்மறாணி, செல்வி பி.பிருந்தா, திருமதி எஸ்.பூரணி, செல்வி எஸ்.பிறே மளா, திருமதி என்.ராஜலெட்சுமி -

பி.ராஜேஸ்வரன், ஆர்.ராஜ்கரன், திருமதி எஸ்.ராஜினி, என்.ரமணன், என்.ராமதாஸ், திருமதி பி.ரேணுகா, திருமதி பி. உருத்திராதேவி, செல்வி எஸ்.சகுந்தலா, திருமதி பி.சகிலா, செல்வி கே.சஞ்ஜீவனி, செல்வி எஸ்.சரவாஜினி, செல்வி ஏ.சர்வா ஜினி, செல்வி எஸ்.சசிகலா, என்.செல்வேந்திரா, கே.சேதுலிங்கம்,

ஆர்.சாந்தகுமார், செல்வி பி.சாந்த நாயகி, செல்வி பி.சர்மிளா, திருமதி வி.சித்திரகலா, திருமதி ரி.சிவாஜினி, செல்வி எஸ். சிவகாந்தி, ரி.சிவகுமார், எம்.சிவலிங்கம், வி.சிவானந்தநாதன், எஸ். சிவராஜன், எஸ்.சிவரஞ்சினி, திருமதி ம.சிவசாந்தினி, ரி.ஸ்ரீகரன், எஸ்.ஸ்ரீதரன், ஏ. சுபாகரன்,

செல்வி பி.சுபந்தினி, திருமதி எஸ்.சுகந் தினி, திருமதி பி.சுகந்தினி, செல்வி கே. சுலோஜினி, திருமதி ஆர்.சுனித்தா, திருமதி எஸ்.சுதாஜினி, ஆர்.சுதர்சன், திருமதி பி.சுதர்சினி, ரி.தனேஸ்வரன், கே.தர்மஜீலன், செல்வி எஸ்.தர்சினி, பி.தயாளன், செல்வி வி.தயாளினி, செல்வி எஸ்.திகழ்ஜோதி, திருமதி ஏ.தினேஷா, திருமதி திரிவேணி திரிலோசினி, ஆர்.துஷியந்தன், கே.துஷியந்தன், செல்வி எஸ்.உருத்திரபிரியா, கே.வசந்தமாறன், திருமதி எஸ்.வாசுகி, செல்வி கே.வாசுகி, ஏ.வத்சலன், திருமதி பி.விஜிதா, ஆர்.வின்சன்ற்.

**முழுநேரம் 2007/2008**

பி.தயாபரன், திருமதி கே.மார்லின் சுஜீவா, திருமதி ரி.தாக்ஷாயினி, எஸ்.பொன் திவாகரன், ஜெ.ரஞ்சித்காந், திருமதி ஆர். வாசுகி. (9)

# தொழில் வழங்குநர்களுக்கான கருத்தரங்கு நாளை

யாழ்ப்பாணம், மே 27

தேசிய பயிலுநர் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபையின் ஏற்பாட்டில் தொழில் வழங்குநர்களுக்கான கருத்தரங்கு நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலையக மண்டபத்தில் மேற்படி அதிகாரசபை மாவட்ட முகாமையாளர் கி.கிருஷ்ணபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் க.கணேஷ் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் கலாநிதி ந.யோகராஜன் யாழ்.உயர் தொழில்நுட்பக் கல்லூரிப் பணிப்பாளர் கெ.கதிரமலை, யாழ்.மாவட்டச் செயலக திட்டமிடற் பணிப்பாளர் இ.மோகனேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வர்.

மேற்படி கருத்தரங்கில் கைத்தொழில் திணைக்கள மாவட்ட அதிகாரி ப.ராகவன், இளைஞர் சேவை மன்ற உதவி இயக்குநர் அ.சக்திவேல், கைத்தொழில் அபிவிருத்திச்சபை பதில் உதவி இயக்குநர் ஆர். ஜெயமனோன், தொழிற்பயிற்சி அதிகாரசபை மாவட்ட இணைப்பாளர் ஆர்.அகிலன், தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை தொழில் வழிகாட்டல் அதிகாரி ஞா.தே.இரத்தினகுமார் ஆகியோரின் கருத்துரைகள் இடம்பெறவுள்ளன. (201)

## பகிரங்க ஏல விற்பனை

யாழ்.பழைய பூங்கா வளாகத்தினுள் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் அரச அதிபர் வதிவிடத்திற்கான உள்ளக வீதி அமைப்பதற்கு தடையாகவுள்ள வேம்பு, மலைவேம்பு ஆகிய இரண்டு பெறுமதி வாய்ந்த மரங்கள் ஜூன் மாதம் 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன. இவ் ஏலவிற்பனையில் குறிப்பிட்ட மரங்களைப் பெற்றுக் கொண்டவர்கள் அன்றைய தினமே அவற்றிற்குரிய பணத்தைச் செலுத்தி பழைய பூங்கா வளாகத்திலிருந்து மரங்களை ஒரு வாரத்தினுள் அகற்றுதல் வேண்டும். மேற்படி மரங்களைப் பார்வையிட விரும்புபவர்கள் யாழ்.மாவட்டச் செயலக நிர்வாக உத்தியோகத்தருடன் தொடர்புகொண்டு பார்வையிடலாம்.

அரச அதிபர்

(சி/558727) மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியரான

அ.அஜித்குமார் அவர்களின் அன்புத் தந்தை

**கந்தையா அருமைத்துரை**

25.05.2009 அன்று அகாலமரணமான செய்தி கேட்டு அதிர்ச்சியடைவதுடன் அன்னாரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்

யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி. (85608)

## யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகத்தின் (THE ROTARY CLUB OF JAFFNA) மனிதாபிமான வேண்டுகோள்

இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து அல்லலுறும் வன்னி மக்களுக்கு வழங்குவதற்காக யாழ்.றோட்டறிக் கழகம் பொது மக்களிடமிருந்து பால்மா வகைகள், பிஸ்கட் வகைகள், உடுதுணிகள், போத்தலில் அடைக்கப்பட்ட தண்ணீர் மற்றும் தேவையான பொருள்களைச் சேகரித்து வருகின்றது. வழங்கவிரும்பும் பரோபகார உள்ளம் படைத்தோர் உங்கள் பொருள்களை உதயன் பணிமனை, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள 'கருமபீடத்'தில் தயவுசெய்து ஒப்படைக்குமாறு வேண்டுகின்றோம்.

கொழும்பில் வதியும் எமது உறுப்பினர்களும், அன்பர்களும் பொருள்களை இல.32, முதலாம் மாடி Hampden Lane, வெள்ளவத்தையில் இருக்கும் 'Uthayan Online' அலுவலகத்தில் தயவுசெய்து ஒப்படைக்குமாறு வேண்டுகின்றோம்.

## யா/யூனியன் கல்லூரி - தெல்லிப்பழை பழைய மாணவர் சங்கம் பொதுக் கூட்டம்

இடம் : யா/இராமநாதன் கல்லூரி
காலம் : 31.05.2009
நேரம் : மு.ப. 9.30 மணி

அனைத்து பழைய மாணவர்களையும் தவறாது சமுகம் அளிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

வி.பாலசிங்கம் (தலைவர்) (சி/558726) சோ.சுகிர்தன் (செயலாளர்).

## தேவை

யாழ்.நகரில் விரைவில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள தம்ரோ (Damro) தளபாட விற்பனை நிலையத்திற்கு பின்வரும் பதவிகளுக்குத் தகுதியானவர்கள் தேவை.

1. விற்பனைப் பிரதிநிதி (Sales Rep.)
2. கணக்காளர்
3. காசாளர்
4. விற்பனையாளர்கள்.

தொடர்புகட்கு:

**ஜமுனா ஸ்ரோர்ஸ்**

யாழ்.வீதி, நெல்லியடி.

T.P.: 021 226 3970, 0777 422604 (85605)

## இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் லேன், நல்லூர். (85446)

## தவறிவிட்டது

தொல்புரம் மேற்கு, கலைவாணி வீதி, சுழிபுரம் என்னும் முகவரியுடைய மகாலிங்கம் பிரதீபன் என்பவரது தேசிய அடையாள அட்டை (871714045V) மற்றும் விசேட அடையாள அட்டை என்பன கொடிகாமத்திலிருந்து சங்கானை வரும் வழியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் வாணி பிஸ்கட் இன்டஸ்றீஸ், பிரதான வீதி வடலியடைப்பு என்னும் முகவரியிலோ அல்லது 060 2214682 என்னும் தொலைபேசியிலோ தொடர்பு கொண்டு தந்துதவுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

# வீதி புனரமைப்பு

மானிப்பாய், மே 27

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட நவாலி வடக்கு - நாச்சிமார் வீதி விரைவில் புனரமைத்துத் தரப்படும் என்று மானிப்பாய் பிரதேச சபை செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் தெரிவித்துள்ளார்.

கடந்த 32 வருடங்களுக்கு மேலாக மேற்படி நவாலி வடக்கு - நாச்சிமார் வீதி மீள் புனரமைப்பு இன்றி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

குறிப்பிட்ட இவ் வீதி இவ்வருட இறுதிக்குள் புனரமைத்துத் தரப்படும் என பிர தேச சபை செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் அறிவித்துள்ளார். (203-95)

PANDA Express UNIVERSAL COURIER
No 167, Kasthuriyar Rd, Jaffna. (Computer Express Building)
Phone : 021 222 8250, 0777 222422
யாழ்நகரில் இருந்து சர்வதேச ரீதியாக இருக்கும் உங்கள் உறவுகளிற்கு வேண்டிய ஆவணங்கள், பொதிகள் என்பவற்றை மிககுறைந்த கட்டணத்தில் உலகின் எந்நாட்டிற்கும் பாதுகாப்பாகவும் விரைவாகவும் அனுப்பிவைக்கப்படும்
நீங்கள் குறிப்பிடும் முகவரியில் பாதுகாப்பாக ஒப்படைக்கப்படும்
கீழ்குறிப்பிடப்பட்ட இடங்களில் உங்கள் பொதிகள், ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.
Head Office: PANDA EXPRESS, No 30-1/20, W.E.De Silva Mw. Colombo-06 0112500207
Jaffna Office: Computer Express No 167, Kasthuriyar Rd, Jaffna. 021 222 8250

COMPUTER EXPRESS
Institute of Information Technology
No 167, Kasthuriyar Road, Jaffna. 0212228250
மாபெரும் புலமைப்பரிசில்திட்டம் - 2009
Diploma in Microsoft Office - 3 Months - 2500/=
Diploma in Desktop Publishing - 4 Months - 15000/= 3000/=
Diploma in Web page Designing - 3 Months - 15750/= 3150/=
Diploma in Graphic Publishing - 4 Months - 15750/= 3150/=
Diploma in Hardware Engineering - 3 Months - 15000/= 3000/=
Diploma in AutoCAD - 3 Months - 15000/= 3000/=
Accounting Package (Quick Book) - 3 Months - 15750/= 3150/=
Diploma in Computer Science - 4 Months - 15750/= 3150/=
Honors Diploma in Computer Science - 4 Months - 18000/= 3600/=
50% Off
ADVANCE COURSES
Diploma in Video Editing 4250/=
Diploma in Multimedia 3750/=
computer express ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள், சர்வதேச தரம்வாய்ந்த சான்றிதழ்கள், வரையறையற்ற செய்முறைப்பயிற்சி
வகுப்புக்கள் ஆரம்பம்
Batch
I : 28/05/2009 - 09AM
II : 29/05/2009 - 09AM
III: 30/05/2009 - 09AM/02PM
IV : 31/05/2009 - 09AM/02PM
V : 03/06/2009 - 09AM

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தடுத்து வைத்திருக்கும் வைத்தியர்களை உடனடியாக விடுவிக்க ஆவன செய்க!

## ஜனாதிபதியிடம் ஆனந்தசங்கரி கோரிக்கை

கொழும்பு, மே 27

''கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் கடமையாற்றிய வைத்தியர்களான ரி.சத்தியமூர்த்தி, து.வரதராஜா, வி.சண்முகராஜா ஆகியோர் மீது எந்தவிதக் குற்றங்களும் இல்லை. அவர்களைத் தடுத்து வைத்திருப்பது, அவர்களுக்குத் தண்டனை கொடுப்பது சரித்திரத்தில் பெரும் தவறாகக் கணிக்கப்படும். எனவே அவர்களை உடனடியாக விடுவிக்கவேண்டும்.''

- இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியில் தலைவர் வீ.ஆனந்தசங்கரி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பவை வருமாறு -

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் பிரதேச சுகாதார சேவைகளின் பணிப்பாளர்களாகக் கடமையாற்றிய வைத்தியர்களான ரி.சத்தியமூர்த்தி, து.வரதராஜா, முல்லைத்தீவு வைத்திய அத்தியட்சகர் வி.சண்முகராஜா ஆகியோர் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றமை சம்பந்தமாக தலையிட்டு விடுவிக்க ஆவன செய்ய வேண்டும். வன்னிப் பகுதி வைத்தியர்கள் தப்பி வந்தபோதும், இம் மூவர் மட்டும் அங்கே தங்கியிருந்து இராணுவம் முன்னேற முன்னேற வைத்தியசாலையையும் நகர்த்திக் கொண்டு இரவு பகலாக நோயாளிகளுக்கும், காயமடைந்தோருக்கும் வைத்திய சேவையை மேற்கொண்டிருந்தனர்.

### சிங்களப் பேராசிரியரிடம் ஆலோசனை பெற்று சிசுவைக் காப்பாற்றினார்

தனி ஒருவரால் சமாளிக்க முடியாத பெரும் எண்ணிக்கையினரை இவர்கள் மூவரும் கவனித்து வந்தனர். பல நாள்கள் தேநீர் மட்டும் அருந்தி உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்த சிசு ஒன்றிற்கு வைத்தியம் செய்த ஒரு வைத்தியர், தனக்கு போதித்த ஒரு சிங்களப் பேராசிரியரிடம் ஆலோசனை பெற்று அக் குழந்தையை காப்பாற்றியுள்ளார். இரவு பகலாக மோசமான கால நிலையையும், தம்மைச் சுற்றி பாய்ந்து கொண்டிருந்த துப்பாக்கிக் குண்டுகளையும் பொருட்படுத்தாது பணி புரிந்தார்கள்.

தொடர்ந்து ஷெல் தாக்குதல் காரணமாக அரச நிர்வாகம் முடங்கிய நிலையில் உணவுக் கப்பலுக்கு துணைபோவதையும் காயமுற்றோரை மீட்டுச் செல்வதையும் இதே காரணத்துக்காக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மறுத்திருந்த வேளை, வேறு வழியின்றி இவர்களும் தமது சேவையிலிருந்து ஒதுங்கிக் கொண்டனர். இவர்களின் சேவையாலேயே இடம் பெயர்ந்தோரில் பெரும் பகுதியினர் உயிர் வாழ்கின்றனர். பல்வேறு பிரச்சினைகளை இவர்கள் எதிர்நோக்கிய போதும் இனி மக்களுக்கு சேவை செய்யும் நிலை இல்லை என்பதை உணர்ந்த பின்பே தமது சேவையை நிறுத்திக் கொண்டனர்.

அவ்வேளை அவர்களுக்கு தோன்றிய ஒரேயொரு வழி, ஏனைய இடம்பெயர்ந்தவர்கள் போல தாமும் முள்ளிவாய்க்காலை விட்டு வெளியேறி நலன்புரி முகாம்களுக்கு வந்து சேர்வதே. அவர்கள் குற்றவாளிகளாக தப்பியோடவில்லை. ஆனால் பாதுகாப்புக்கருதி முகாமுக்கு வந்தவேளை முகாமில் வைத்து இருவரும், காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த மூன்றாவது வைத்தியரும் அதிகாரிகளால் அழைத்துச் செல்லப்பட்டனர். இவர்களின் விடயத்தில் பின்வரும் உண்மைகள் கவனத்திற்கு கொள்ளப்பட வேண்டியவையாகும்.

இவர்கள் அரச ஊழியர்களாக வன்னிப் பகுதியில் நீண்டகாலம் சேவை செய்தவர்கள். அரச ஊழியரோ தனியார்துறை ஊழியரோ விடுதலைப் புலிகளின் கட்டளையை மீறிச் செயற்பட முடியாத நிலையில் அவர்களின் கட்டளைக்கமையவே, ஊடகங்களுக்கு அறிக்கை விடும் விடயங்கள் உட்பட, சகல விடயங்களிலும் செயற்பட நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தனர்.

இவ் வைத்தியர்கள் விடுதலைப் புலிகளின் கட்டளைக்கமைய செயற்பட்டமைக்கு தண்டிக்கப்பட்டால் அப் பகுதியிலே சேவை செய்த அரச ஊழியர் ஒவ்வொருவரும் தண்டனையிலிருந்து தப்ப முடியாது.

கடமை உணர்வுடன் அவர்கள் கடைசி நிமிடம் வரை கடமையாற்றியதால் பல்லாயிரக் கணக்கான உயிர்கள் காப்பாற்றப்பட்டன.

### பாராட்டுப் பத்திரம் வழங்கி கௌரவிக்கப்பட வேண்டியவர்கள்

விசேடமாக மிக இக்கட்டான வேளையில் காயமுற்றோருக்கு பணியாற்றி அரசினுடைய பெயரையும் காப்பாற்றியமையால் அவர்கள் பராட்டுப் பத்திரம் வழங்கிக் கௌரவிக்கப்பட வேண்டியவர்களாவர். சுகாதாரத் திணைக்களம் இவர்களுடைய சேவையைப் பாராட்ட கடமைப்பட்டுள்ளது.

எனவே, இவர்கள் மீது எதுவித குற்றமும் இல்லையென இவர்களை விடுவிப்பீர்கள் என நம்புகிறேன். இன்றுவரை நான் அறிந்த வரையில் வன்னிப் பகுதியில் சேவை செய்த ஒரு ஊழியர் தன்னும் அரச கட்டுப்பாட்டுப்பாட்டு கோவையை மீறி செயற்பட்டமைக்கு தண்டிக்கப்பட்டனர் என நான் அறியவில்லை.

எத்தகைய தண்டனை கொடுக்கப்பட்டாலும் அது சரித்திரத்தில் பெரும் தவறாகவே கணிக்கப்படும். (சி)

# ஜனாதிபதி, கோத்தபாய மீது போர்க் குற்றங்கள் சுமத்தப்பட்டால் ஐ.தே.க. அரசின் பக்கம் நிற்கும்

## அக்கட்சி நேற்று நாடாளுமன்றத்தில் அறிவிப்பு

கொழும்பு, மே 27

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கும் எதிராக சர்வதேச குற்றவியல் விசாரணையொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது என்றும், இவ்விடயத்தில் அரசுடன் கைகோர்த்து அரசுக்கு ஆதரவாகச் செயற்பட ஐ. தே. க. தயாராகவுள்ளது என்றும் ஐக்கிய தேசியக் கட்சி நேற்று நாடாளுமன்றில் கூறியது.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற நிதிச்சட்டமூலங்கள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐ.தே.கட்சியின் எம்.பி.யான தயாசிறி ஜயசேகரவே இதைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஜே.ஆர்.ஜெயவர்த்தன முதல் இந்நாட்டை ஆட்சி செய்த அனைத்து தலைவர்களும் பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டப் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

அந்த அடிப்படையில்தான் மஹிந்த ராஜபக்ஷ நடவடிக்கை எடுத்தார். இப்போது பயங்கரவாதத்தை முற்றாகத் தோற்கடித்து வெற்றியும் கண்டுள்ளார்.

இந்த வெற்றியை நாட்டுக்கு பெற்றுக் கொடுத்தமைக்காக நாம் ஜனாதிபதிக்கும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆனால், போர் குற்றங்களுக்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், கோத்தபாய ராஜபக்ஷவும் சர்வதேச விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளனர். இவ்வாறு இடம்பெற்றால் ஐக்கிய தேசியக் கட்சி அரசுடன் கைகோர்த்து அதற்கு அரசுக்கு ஆதரவாகச் செயற்படும்.

பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்ட பின்னர் அரசியல் தீர்வு தொடர்பில் அரசுக்குள் பல் வேறுவகையான கருத்துக்கள் நிலவுகின்றன. தீர்வு வேண்டும் என்று ஒரு குழுவும், தீர்வு வேண்டாம் என்று இன்னொரு குழுவும் கூறிவருகின்றன. அதே போல் அரசிடம் விமல் வீரவன்ஸ சமஷ்டித் தீர்வு வழங்கப்படக்கூடாது என்று கூறுகின்றார்.

இந்த யுத்தத்தில் மூன்றுலட்சம் மக்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளனர் என்று ஜனாதிபதியே கூறியுள்ளார். அப்படியாயின் அந்த மக்களுக்கு அரசியல் தீர்வொன்று வழங்கப்பட்டே ஆகவேண்டும்.

தமிழ் மக்களுக்கு உரிய உரிமைகள் வழங்கப்படவேண்டும் என்றே சர்வதேச நாடுகளும் கூறிவருகின்றன. இதை நாம் கவனத்தில் எடுக்க வேண்டும்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதென்றால் நாம் அனைவரும் ஓர் இணக்கப்பாட்டுக்கு வரவேண்டியது மிக அவசியம். - என்றார். (அ-சி)

### ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை விடயம்:

# தமிழரின் நலனைக் கருத்தில் எடுத்து இந்தியா செயற்பட வேண்டும் என்கின்றார் கருணாநிதி

## பிரதமர் மன்மோகன் சிங்குக்கு கடிதம்

சென்னை, மே 27

''இலங்கைத் தமிழர் விடயத்தை ஒட்டி ஐ.நா. மனித உரிமைக் கவுன்ஸிலின் முன்பாக இலங்கை அரசு முன்வைத்துள்ள வரைவுத் தீர்மானம், இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக உள்ளமையால் இது குறித்து இந்திய மத்திய அரசு உரிய முடிவு எடுக்க வேண்டும்.''

- இவ்வாறு முதலமைச்சர் கருணாநிதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு அவர் நேற்று முன்தினம் எழுதியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

இலங்கைத் தமிழர்களின் உணர்வுகளை மதித்தும், அவர்களது எதிர்கால நலனுக்கு சுற்றவகையிலும் முடிவெடுக்க வேண்டும்.

இலங்கையின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடுவது அந்நாட்டின் இறையாண்மையையும், ஒருமைப்பாட்டையும், சுதந்திரத்தையும் பாதிக்கும் செயல் என்றபோதிலும் இலங்கைப் பிரச்சினையை ஒரு சிறப்பு நிகழ்வாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஐ.நா. மனித உரிமைக்கவுன்ஸிலில் முன்பு இலங்கை அரசு சமர்ப்பித்துள்ள வரைவுத் தீர்மானம் இலங்கைத் தமிழரின் நலனுக்கு எதிரானதாக உள்ளது என்று உலகம் முழுவதும் பரவியுள்ள லட்சக் கணக்கான தமிழர்கள் நம்புகிறார்கள்.

எனவே, இலங்கை தமிழர் மக்களின் உணர்வுகளையும், அவர்களது வருங்கால நலனையும் கருத்தில் கொண்டு இந்த விடயத்தில் உரிய முடிவு எடுக்க வேண்டும் என்று தங்களை கேட்டுக் கொள்கிறேன்- என்றுள்ளது.

## கொழும்பில் தமிழ் இளைஞர் மீது சூடு

கொழும்பு, மே 27

கொழும்பு புதுச்செட்டித் தெருவில் நேற்று மதியம் இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் தமிழ் இளைஞர் ஒருவர் காயமடைந்தார் எனக் கொட்டாஞ்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம், மயிலிட்டியைச் சேர்ந்தவர் எனக் கூறப்படும் சற்குணராஜா விமலன் (வயது - 26) என்ற தமிழ் இளைஞரே இவ்வாறு துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியவராவார்.

இவர் துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அவசிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஓட்டோ ஒன்றில் வந்த ஆயுததாரிகள் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டு விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக கொட்டாஞ்சேனைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# துணைக் குழுக்களுக்கு இனி தேவையா? உடன் களையக் கோருகின்றது ஐ.தே.கட்சி!

கொழும்பு, மே 27

நாட்டில் பயங்கரவாதம் முற்றாக முடிவுக்கு வந்துள்ளதால் துணை ஆயுதக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும் என்றும் பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் அவசரகாலச் சட்டம் போன் றவை நடைமுறையிலிருந்து நீக்கப்பட வேண்டும் என்றும் ஐக்கிய தேசியக் கட்சி அர சிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்களின் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அக்கட்சியின் எம்.பி. லக்ஷ்மன் கிரியெல்லவே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

பயங்கரவாதம் இப்போது தோற்கடிக்கப்பட்டுவிட்டது. ஆனால், தேசியப் பிரச் சினையைத் தீர்ப்பதற்கான அரசியல் தீர்வு எதுவும் இந்த அரசிடமில்லை.

20 வருடங்களுக்கு முன்பு நாம் கொண்டு வந்த அரசியல் தீர்வை உதட்டளவிலாவது ஆதரித்திருந்தால் அப்போதே இந்தப் பயங்கரவாதம் முடிவுக்கு வந்திருக்கும்.

நாம் அரசியல் தீர்வு ஒன்றை முன்வைப்பதற்கும் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கும் அரசுக்கு முழு ஒத்துழைப்பையும் வழங்கத் தயாராகவுள்ளோம். ஜனாதிபதி நாடாளுமன்றில் ஆற்றிய உரையின்போது இந்த ஒத்துழைப்பைக் கோரியமைக்காகவே நாம் இந்த ஒத்துழைப்பை வழங்க முன்வந்துள்ளோம்.

பயங்கரவாதம் இப்போது ஒழிக்கப்பட்டுவிட்டதால் துணை ஆயுதக்குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும். அவசரகாலச்சட்டம் மற்றும் பயங்கர வாதத் தடைச்சட்டம் ஆகியவையும் நடை முறையிலிருந்து நீக்கப்பட வேணடும்.

கிழக்கில் தற்போது நிலவும் பதற்ற நிலைமையைக் கருத்தில் கொண்டே நாம் இந்த வேண்டுகோளை விடுக்கின்றோம். இந்த வேண்டுகோளை நிறைவேற்றிய பிற்பாடு தேர்தல்களை நடத்துவதே நல்லது.

தேர்தல்களைக் கருத்தில் கொண்டு நாம் இந்த வேண்டுகோளை விடுக்கவில்லை. மக்களின் நலனை கருத்தில்தான் இதைச் சொல்கிறோம். இந்த [illegible] பாதுகாக்க வேண்டியது அரசின் கட்டாய கடமை. - என்றார்.


## கண்ணீர் அஞ்சலி



பேராதனைப் பல்கலைக்கழக விவசாய பீட முதலாம் வருட மாணவன்
மகேந்திரன் பிரியாங்கன்
அவர்களது அன்புத் தாய்
திருமதி
தவமணிதேவி மகேந்திரன்
அவர்கள்
(நூலகர், யாழ் மாநகர சபை, நல்லூர், முன்னாள் நூலகர் நல்லூர் பிரதேச சபை, நூலகம் கொக்குவில்)

அன்பின் பிறப்பிடமாய் பண்பின் கருவூலமாய்
அகிலத்தில் திகழ்ந்த தவமணிதேவியே
உம் பிரிவு தாங்க முடியவில்லையே
உள்ளம் வேதனையால் தவிக்கின்றதே!
கருத்துக் கலசமாய் காவியத்தில் ஓவியமாய்
நெஞ்சம் நிறைய வாழ்ந்திருந்தீர்!
இன்று உமை நினைந்து இறைவனை வணங்கி
ஆத்ம சாந்திக்காய் இறைஞ்சுகின்றோம்!

உமது பிரிவால் துயருறும்
விவசாய பீட மாணவர்கள்,
பேராதனை பல்கலைக்கழகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு எதிராக இஸ்ரேல் கொண்டுவந்த யோசனை தோல்வி

இலங்கைக்கு எதிராக இஸ்ரேல் உலக சுகாதார ஸ்தாபன அமர்வில் கொண்டுவந்த யோசனை 193 நாடுகளின் ஒத்துழைப்புடன் முறியடிக்கப்பட்டது என சுகாதார போஷாக்குத் துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

சுகாதார அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா உலக சுகாதார ஸ்தாபனத்தின் 62 ஆவது அமர்வில் இலங்கை சார்பாக கலந்து கொண்டதுடன் இந்த அமர்வில் உலக சுகாதார ஸ்தாபன தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டார்.

மனிதாபிமான உரிமைகளை மீறும் நாடாகக் கருதி இலங்கைக்கு எதிராக விசாரணை நடத்துவதற்காக உலக சுகாதார ஸ்தாபன விசாரணைக் குழுவொன்றை இலங்கைக்கு அனுப்ப வேண்டுமென இந்த அமர்வின் போது இஸ்ரேல் யோசனையொன்றை முன்வைத்தது. ஆனால், சக நாடுகளின் உதவியுடன் இந்த யோசனை தோற்கடிக்கப்பட்டது என அமைச்சர் தெரிவித்தார்.

இதற்கு முன் இலங்கையர் எவரும் இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டது கிடையாது. உலக சுகாதார ஸ்தாபன தலைவர் பதவிக்கு தனது பெயர் சிபார்சு செய்யப்பட்டுள்ளதை அறிந்தது முதல் ஜெனீவா உலக சுகாதார ஸ்தாபனத்திற்கு முன்பாகவும் ஐ.நா. முன்பாகவும் பெருமளவு புலிகளின் ஆதரவாளர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் - என்றார்.

## பயங்கரவாதத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடைச் சட்டத்தையோ உடனடியாக நடைமுறையில் இருந்து எம்மால் நீக்கிவிட முடியாது.

பயங்கரவாதத்திற்குத் துணை போனவர்கள் தொடர்பாக நாம் தேடிப்பார்க்க வேண்டும். அவர்களைக் கைதுசெய்து சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு எமக்கு இந்த இரு சட்டங்களும் தேவைப்படுகின்றன.

இந்தச் சட்டங்களை நடைமுறையில் இருந்து நீக்கவேண்டும் என்று எதிர்க்கட்சியினர் வேண்டுகோள் விடுப்பது மீண்டும் ஒரு பயங்கரவாதம் இந்த நாட்டில் தலைதூக்க இடமளிப்பதற்காகவா அல்லது சர்வதேச பயங்கரவாதம் நாட்டில் நுழைவதற்கு இடமளிப்பதற்காகவா என்பது தெரியவில்லை.

எப்படி இருப்பினும் இந்த இரு சட்டங்களையும் உடனடியாக நீக்கும் திட்டம் எதுவும் எம்மிடமில்லை - என்றார். (அ-சி)

## புலிகள் தோற்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயங்கரவாதம் இப்போது ஒழித்துக்கட்டப்பட்டு விட்டதால் அவசரகாலச்சட்டத்தை நடை முறையிலிருந்து நீக்க வேண்டும் என்று எதிர்க்கட்சி கோருகின்றது. நாட்டில் உண்மை நிலையை உணர்ந்துகொண்டு தான் அக்கட்சிஇதைக் கோருகின்றத ?

புலிகளுடன் தொடர்புடைய பலர் கைதுசெய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர். பலர் இன்னும் கைதுசெய்யப்படவேண்டியுள்ளனர். இவ்வாறான நிலைமையைக் கருத்திற்கொள்ளாமல் எதிர்க்கட்சி அவசரகாலச்சட்டத்தை நீக்க வேண்டும் என்று கோருகின்றதா?

உலகிலே எந்தவொரு பயங்கரவாத இயக்கத்திடமும் இல்லாத விமானப்படை, கடற்படை போன்றவை புலிகளிடம் இருந்தன.எமது படையினர் அப்படிப்பட்ட அமைப்பை முற்றாகத் தோற்கடித்துள்ளனர்.

புலிகள் தோற்கடிக்கப்பட்டமை தேசிய ரீதியான வெற்றிமாத்திரம் அல்ல, அது சர்வதேச வெற்றியும்கூட.இந்த வெற்றியைப் பெற்றுத்தந்த படையினருக்கு நாம் எமது நன்றிகளை மீண்டும் மீண்டும் தெரிவித்துக் கொள்கிறோம்- என்றார்.

## பொதுமக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவற்றுக்கு யார் காரணம் ஆகியவற்றை உறுதி செய்வதற்கு சுயாதீனமான - நம்பகத் தன்மையுடைய சர்வதேச விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்.

இலங்கையில் நடைபெற்ற இறுதி யுத்தத்தின்போது பொதுமக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பாக சர்வதேச விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்.

இரு தரப்புகளும் யுத்தத்தின் போது மக்களுக்கு தீங்கு விளைவிக்கக் கூடாது என்ற அடிப்படைக் கொள்கைகளை கடுமையாக மீறியுள்ளனர் என நம்புவதற்கு வலிமையான சான்றுகள் உள்ளன.

அதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகள் பொதுமக்கள் வெளியேறுவதைத் தடுத்தனர். அத்துடன் அவர்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தினர். இலங்கை அரசு பொதுமக்கள் வாழும் பகுதிகள் மீது கனரக் ஆயுதங்களைப் பயன்படுத்தியது. சரணடைய வந்த போராளிகளை இராணுவத்தினர் சுட்டுக் கொன்றனர் என்பன எமக்கு கவலையளிக்கின்றன - என்றார். (அ-சி)

## புலிகள் ஜனநாயக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்டு பிடிக்கவேண்டியுள்ளதால் படையினரின் நடவடிக்கைகள் இன்னமும் முடிவடையவில்லை. சிலர் இராணுவத்தின் பணி முடிவடைந்துவிட்டது எனக் கருதுகின்றனர். இது தவறானது.

வடக்கு - கிழக்குப் பகுதியிலிருந்தும் கண்ணிவெடிகளை அகற்ற வேண்டும். பின்னர் காடுகளில் மறைந்துள்ள விடுதலைப் புலிகளை தேடிக்கண்டுபிடிக்க வேண்டியுள்ளது.

மேற்குலக நாடுகள் தங்களது தேசங்களில் உள்ள புலிகளின் வலையமைப்புகளுக்கு எதிராக நடவடிக்கையெடுக்க வேண்டும். அந்த அமைப்பிற்காக ஆயுதங்களை, வெடிமருந்துகளைப் பெற முனையும் நபர்களை அரசிடம் ஒப்படைக்க வேண்டும்.

பாதுகாப்பு நடைமுறைகளை தொடரும் எண்ணம் எமக்கில்லை. நாட்டில் நிலைமை வழமைக்குத் திரும்பியதும் இந்தச் சோதனைகள் படிப்படியாக தளர்த்தப்படும்.

கொழும்பில் தமிழர்கள் மாத்திரம் இலக்கு வைத்து சோதனையிடப்படுவதில்லை. அரச அதிகாரிகள், அரசியல்வாதிகள்கூட சோதனைச்சாவடிகளில் சோதனையிடப்படுகின்றனர் - என்றார். (அ-சி)

## உயர்தர, புலமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி முல்லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் பரீட்சை களை நடத்தக் கூடிய சூழ்நிலை நிலவவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. மேலும் வவுனியா மாவட்டத்தில் உள்ள பல பாடசாலைகள் இடைத்தங்கல் முகாம்களாக பயன்படுத்தப்பட்டு வருகின்ற காரணத்தினால் பரீட்சைகளை நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் நிலவிய யுத்தச் சூழ்நிலையினால் வன்னி மாணவர்கள் கடந்த எட்டு ஒன்பது மாதங்களாக கல்வி கற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதனால், சகல மாணவர்களுக்கும் சம சந்தர்ப்பம் அளிக்கும் நோக்கில் அரசாங்கம் இந்தத் தீர் மானத்தை எடுத்துள்ளதாக பரீட் சைகள் ஆணையாளர் அனுர எதிரிசிங்க தெரிவித்தார். (அ)

## புலிகள் மீண்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐ.ரி.என். தொலைக்காட்சிக்கு அளித்துள்ள செவ்வி ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

வெளிநாடுகளில் உள்ளவர்கள் புதிய தலைவரொருவரை உருவாக்கி மீண்டும் விடுதலைப் புலிகள் இயக்கத்தை செயற்பட வைப்பதற்கு முயற்சிக்கலாம்.

தற்போது எமது படையில் 2 இலட்சம் பேர் உள்ளனர். வெகு விரைவில் மேலும் ஒரு இலட்சம் பேரை இணைக்கவுள்ளோம்.

**அரசியல் நிர்வாகத் தலைமையும் அழிப்பு**

விடுதலைப் புலிகளால் முன்னர் போன்று பயங்கரவாத அமைப்பொன்றை இனிமேல் கட்டியெழுப்ப முடியாது. அது இலகுவானதாக அமையாது.விடுதலைப் புலிகளின் தலைவர் உட்பட இரண்டாம் கட்டத் தலைவர்களை இராணுவம் கொன்றுள்ளதுடன், அவர்களது அரசியல் நிர்வாக தலைமையையும் அழித்துள்ளது.

2006 இற்குப் பின்னர் 22 ஆயிரம் விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டனர். 9 ஆயிரம் பேர் சரணடைந்தனர். சர்வதேச பொலிஸாரால் தேடப்படும் செல்வராசா பத்மநாதன் இன்னமும் எஞ்சியிருக்கிறார்.

விடுதலைப் புலிகளின் தலைமையை அழித்த பிறகு கொழும்பிலும் ஏனைய தென் பகுதி நகரங்களிலும் மறைந்துள்ள தற்கொலைக் குண்டுதாரிகளைத் தேடிக் கண்டு பிடிக்கும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சிறிய குழுவொன்று காடுகளிலும் மறைந்துள்ளது.

இளைஞர்கள் விரைவாக எம்முடன் வந்து இணைய வேண்டும். ஒரு மாதத்தில் 10 ஆயிரம் பேரைச் சேர்ப்பதற்கும் நாம் தயார். எமது இலக்கை அடைவதற்கு மேலும் படைச்சிப்பாய்கள் தேவை - என்றார் இராணுவத் தளபதி. (அ-சி)

## மனித ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டுமென கோரியுள்ளன.

இந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்தியா ஆரம்ப கூட்டத்திலிருந்து வெளிநடப்பு செய்துள்ளது.

இது தொடர்பாக 'த டைம்ஸ்' மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

ஜெனிவாவில் நடைபெற்ற ஆரம்பக் கட்டக் கூட்டத்தில் கடும் மோதல் போக்கு தென்பட்டதாகவும், வாக்குவாதங்கள் இடம் பெற்றன எனவும் தெரிவித்துள்ள பார்வையாளர்கள் 47 நாடுகளைக்கொண்ட மனித உரிமை கவுன்ஸில் இலங்கை விவகாரத்தையொட்டி கடுமையாக பிளவுபட்டுள்ளது எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரேரணைக்கு 18 நாடுகள் ஆதரவளித்துள்ள அதே வேளை, 18 நாடுகள் இதனை எதிர்க்கின்றன. ஒன்பது நாடுகள் இன்னமும் இது குறித்துத் தீர்மானிக்காத நிலை காணப்படுகின்றன.

இலங்கை குறித்த விசேட அமர்வு, மனித உரிமை கவுன்ஸில் ஸ்தாபிக்கப்பட்டதன் அடிப்படை நோக்கம் நிறைவேறுகின்றதா என்பதை பரிசோதிக்கும் களமாக அமையும் என சுட்டிக்காட்டப்படுகின்றது.

மனித உரிமை கவுன்ஸில் தன்மீது திணிக்கப்பட்ட காஸா குறித்த விசாரணையை ஏற்றுக்கொண்டது என்பதை சுட்டிக்காட்டியுள்ள ஆய்வாளர்கள் இலங்கை குறித்து முழுமையான விவாதம் இடம்பெறாமல் தவிர்ப்பது குறித்து கடும் சீற்றம் வெளியிட்டுள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியம் முன்வைத்துள்ள பிரேரணையில் இலங்கை விடயத்தையொட்டி சர்வதேச விசாரணை ஒன்று நடத்தப்படவேண்டும் என்பது குறித்து ஏதும் தெரிவிக்கப்படாதது குறித்து ஏற்கனவே மனித உரிமை அமைப்புகள் கடும் சீற்றம் வெளியிட்டுள்ளன.

இதேவேளை, தனது 14 சகாக்களுடன் இணைந்து இலங்கை முன்வைத்துள்ள மாற்றுப் பிரேரணையில் இலங்கை அரசின் நடவடிக்கைகள் பாராட்டப்பட்டுள்ளன. சர்வதேச சமூகம் மேலும் நிதியுதவியை இலங்கைக்கு வழங்க வேண்டுமென்ற கோரிக்கையும் அதில் இடம்பெற்றுள்ளது.

ஜெனிவாவில் இடம்பெற்ற முன்னோடிக் கூட்டத்தில் இரு நிகழ்ச்சி நிரலிற்கும் மத்தியில் கடுமையான மோதல் காணப்பட்டுள்ளது.

இந்தியா, பாகிஸ்தான், மலேஷியா போன்ற நாடுகள் இலங்கை குறித்த விசேட அமர்வை கைவிடவேண்டுமென கோரியுள்ளன.

இந்த வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்தியா,சீனா, எகிப்து ஆகிய நாடுகள் வெளிநடப்புச் செய்தன.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைக்கு ஆயுதங்களை வழங்கிய - உதவிய பல நாடுகளில் வலுவான ஆதரவுடன் இலங்கை இந்த விசேட அமர்வை எதிர்கொண்டுள்ளது எனக் கூறப்படுகிறது. (சி)


Intel pentium 1.6 Prosser } 2in1
LGA DDR II Mother Board
Hard Disk 160GB Sata
Ram Kingston 1 GB
LG DVD Wariter
17" hp CRT Flat moniter
ATX Black Casing
Key Board
Optical Mouse
Multiemedia Speaker
UPS 650W Powertree
Free Computer Table, Mouse Pad, Dust Cover
Package 1 39,000/=

Intel 1.8 Celeron Prosser
Mothe Board MSI 945 DDR II
Ram 1 GB Kingston
Hardiss 80 GB
Asus CD Rom
17" hp CRT Flat moniter
ATX Black Casing
Key Bourd
Optical Mouse
Mulitemedia Speker
UPS 650W Powertree
Free Computer Table, Mouse Pad, Dust Cover
Package 2 41,000/=

Intel Pentium 2.2 Dual core Prosser
FoxConn G31 / Biostar - G31 Mother Board
160 GB Hard Disk
Kinston 1GB Ram 800
LG/Samsung DVD Writer
ATX Black Casing
15" LCD Monitor
Key Board
Optical Mouse
Mulitemedia Speaker
UPS 650W Powertree
Free Computer Table, Mouse Pad, Dust Cover
Package 3 50,000/=

Intel Pentium 2.2 Dual core Prosser
Asus P5GCMt Mother Board
160 GB Hard Disk
Kingston 1GB Ram 800
Asus DVD Writer
ATX Black Casing
17" Samsung LCD Monitor
Key Board
Optical Mouse
Mulitemedia Speaker
UPS 650W Powertree
Package 4 53,500/=

Intel Pentium 2.5 Dual Core
Intel DG31 Mother Board
160GB Hard Disk
Ram 2GB DDR II 800
LG DVD Writer
ATX Black Casing
Viesonic 16" LCD Monitor
Key Board
Optical Mouse
Mulitemedia Speaker
UPS 650W Powertree
Free Computer Table, Mouse Pad, Dust Cover
Package 5 56,000/=

Intel Pentium 2.5 Dual Core
Foxcon M7vmx (512 MB VGD)
250 GB Hard Disk
Ram 2 GB DDR II 800
LG DVD Writer
ATX Black Casing
VieSonic 16" LCD Monitor
Key Board, Optical Mouse
Mulitemedia Speaker
UPS 650W Powertree
Laser Printer, Scanner
Free Computer Table, Mouse Pad, Dust Cover
Package 6 78,000/=

Intel Pentium 2.8 Core 2 Duo (3m)
Mother Board G33 Series
Ram (2GB + 2GB) 4GB
500 GB Hard Disk
Asus DVD Writer
ATX Black Casing
19" LCD Moniter
512 mb NX 8400 Gs VGA Card
Key Board, Optical Mouse
3D Sound Card
5.1 Subwoofer
UPS 650W Powertree
Internal TV Card
Head Phone
Free Computer Table, Mouse Pad, Dust Cover
Package 7 97,500/=

Intel Pentium 2.8 Core 2 Duo (3m)
Mother Board G35 Series
Ram (2GB + 2GB) 4GB
500 GB Hard Disk
Asus DVD Writer
ATX Black Casing
22" LCD Moniter
512 mb NX 8400 Gs VGA Card
3D Sound Card
5.1 Subwoofer
Internal TV Card,
Head Phone
UPS 650W Powertree
Key Board, Optical Mouse
Free Computer Table, Mouse Pad, Dust Cover
Package 8 106,000/=

* Warranty Value 1-3 Years * Stock Available * Free Software Installation

MUSIC WORLD & COMPUTERS
141B, பலாலி வீதி, தபால்பெட்டி சந்தி, திருநெல்வேலி. 0212226[illegible]



Take an easy step towards your Management Degree path

For Whom:- For senior and middle level executives in public and private sector organizations dealing with Business Management & Marketing.

(12 Months) B.Sc (Hons) in Business IT
(12 Months) HND in Business Management
(6 Months) Adv.Dip. in Business Management
(6 Months) Dip. in Business Management

புதிய பிரிவுகள் ஆரம்பம் வார நாள்:- 27-05-2009 வார இறுதி நாள்:- 30-05-2009

IDM 216, Navalar Road, Jaffna. Thavady Road, Manipay. Kodikamam Road, Nelliyadi. Tel.No : 021 2229901



## பாதுகாப்பு மேற்பார்வையாளர் தேவை

G.C.E.(O/L) பரீட்சையில் சித்தியெய்திய பாதுகாப்புப் பணியில் முன் அனுபவமுள்ள அல்லது இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர் ஆகியோரிடமிருந்து பாதுகாப்பு மேற்பார்வையாளருக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விளம்பர இலக்கம் 3905
உதயன் பணிமனை,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## பாதுகாப்புப் பணியாளர்கள் தேவை

கீழ்கண்ட தகைமைகளுடன் பாதுகாப்புப் பணியாளர்கள் தேவை.

* கல்விப்பொதுதராதரப் பரீட்சையில் சித்தியடைந்தோர் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
* பொலிஸ் அல்லது வேறு நிறுவனங்களில் பாதுகாப்பு பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

(ஆண்கள் இரவு Shift வேலை செய்யத் தயாராயிருத்தல் வேண்டும்).

சம்பளம்: 12 மணி வேலை நேரத்திற்கு (Shift) ரூ300/=க்கு குறையாத வேதனம் (நாள் ஒன்றுக்கு)

விளம்பர இலக்கம் 3904
உதயன் பணிமனை,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்


## மரண அறிவித்தல்

### திருமதி சண்முகராசா சற்குணமணி

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சண்முகராசா சற்குணமணி நேற்று (26.05.2009) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.05.2009) பி.ப. 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி.

தகவல்:
சகோதரர்கள்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.05.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org